புதிய தமிழ் இலக்கணம்

377

நான்காம் படிவத்திற்கு

[GENERAL COURSE]

[அரசியலார் 1949-இல் வெளியிட்ட உயர்நிலைப்பள்ளியின் புதிய பாடத்திட்ட அமைப்பின்படி எழுதப்பெற்றது.]

ஆசிரியர்

வித்துவான் ம. பெரியசாமிப் பிள்ளை,

தலைமைத் தமிழாசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி,

திருச்சிராப்பள்ளி.

T. G. கோபால் பிள்ளை

...ளம் | 2/27, பிராட்வே
...ள்ளி | ஜி. டி. சென்னை

1951 [விலை அணா 10.

TB
P31 (9)
N51
135836.

புதிய தமிழ் இலக்கணம்

(GENERAL COURSE)

நான்காம் படிவத்திற்கு

அரசியலார் 1949-ல் முதன்மொழிக்கென வெளியிட்ட
உயர்நிலைப்பள்ளியின் புதிய பாடதிட்ட அமைப்பின்படி
எழுதப்பெற்றது

ஆசிரியர் :

வித்துவான் ம. பெரியசாமிப் பிள்ளை

தலைமைத் தமிழாசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி

திருச்சிராப்பள்ளி

T. G. கோபால் பிள்ளை

பதிப்பாளர்

தெப்பக்குளம் | 2/27, பிராட்வே
திருச்சிராப்பள்ளி | ஜி. டி., சென்னை

[பதிப்புரிமை] 1951 [விலை அணு 10

முதற் பதிப்பு—மே, 1949
இரண்டாம் பதிப்பு—ஜூலை, 1949
மூன்றாம் பதிப்பு—ஜூன், 1951

THE IMPERIAL PRESS, TIRUCHIRAPALLI.

முன்னுரை

தமிழ் இனிமை வாய்ந்தது. அது நமது தாய்மொழி. நமது தாய்மொழியைப் பொன்னேபோற் போற்றிப் பயிலவேண்டுவது மக்களின் கடமை. ஆதலின், தமிழ் மக்களாகிய நாமும் நமது தாய்மொழியாகிய தமிழைப் போற்றிப் பயிலப் பெரிதும் கடமைப் பட் டுள்ளோம்.

நமது நாடு பிறநாட்டார் ஆட்சியிலிருந்தவரை நமது மொழி தனக்குரிய முதலிடம் பெறாதிருந்தது. நாடு தன்னாட்சி பெற்றது; நாட்டு மொழியாகிய தமிழும் முதன்மொழி ஆயிற்று. இது மகிழ்ச்சிக்குரியதே.

நமது அரசியலார் கல்வித் துறையிற் சில திருத்தங்கள் செய்யத் தொடங்கித் தமிழை முதன்மொழியாக்கித் தமிழ்மொழிப் பயிற்சிக்கெனப் புதியனவாகப் பாட திட்டங்கள் வகுத்துள்ளனர். அவற்றுள், இலக்கணப் பாட திட்டம் பொதுமைய முறை (Concentric System) யில் அமைந்ததாகும். பொது மைய முறை என்பது ஒரு பொருளை அடிப்படையாகக் கொண்டு அதனை மாணவர்களின் தகுதிக்கும் வகுப்புக்கும் ஏற்ப விரித்து விளக்கிச் செல்லுகின்ற முறை. இம் முறையில், கீழ் வகுப்பிற் கற்பிக்கப் பட்ட பொருள்கள் சில பல விவரத்துடன் மேல் வகுப்புக்களிற் கற்பிக்கப்படும்; வகுப்பு உயரவுயரப் பொருள்களின் விவரங்களும் விளக்கமும் படிப்படியாக உயரும். இம் முறையில் அரசியலார், நான்கு ஐந்து ஆறும் படிவங்களில், தமிழை முதன்மொழியாகக் கொண்ட மாணவர் அனைவரும் பயிலுதற்கெனப் பொதுவாக ஒரு பாடமுறையும் (General Course), தமிழை இரண்டாவதுமொழி யாகவுங் கொண்டு பயிலும் மாணவர்க்கெனச் சிறப்பாக ஒரு பாட முறையும் (Special Course) அமைத்துள்ளனர். அவற்றுள், நான்காம் படிவப் பொதுமுறைக் (General Course for IV Form) கென எழுதப்பெற்றதாகும் இப்புதிய தமிழ் இலக்கண நூல்.

இதனில், உதாரணங்களும் பயிற்சிகளும் நிரம்பத் தரப்பெற்றுள்ளன. இன்றியமையாமையும் தொடர்புடைமையும் பற்றி அரசியலார் பாட திட்டத்திற் காணப்படாத சிற்சில பொருள்கள் உரிய இடங்களிற் சேர்க்கப் பெற்றுள்ளன. பாட திட்டத்திற் கண்ட பொருள் வரிசையும், முறையும் தொடர்பும் பற்றி இரண்டொரு இடங்களில் முன்பின்னாக மாற்றப்பெற்றுள்ளது. இலக்கண விதிகளும் விளக்கமும் மனத்தில் நன்கு பதிதற்குச் சூத்திரங்கள் பெரிதும் உதவுமாகலின், முக்கியமான நன்னூற் சூத்திரங்கள் ஆங்காங்கே சேர்க்கப்பெற்றுள. ஒரு பொருளைப்பற்றிய விளக்கத்தையும் அதற்கெனத் தரப்படும் உதாரணத்தையும் நன்குணர்ந்து கொண்டபின்னர் அதுபற்றிய சூத்திரத்தைப் படிப்பின், சூத்திரம் எளிதின் விளங்குமாதலின் அம்முறை (Inductive method) பற்றி நன்னூற் சூத்திரங்கள் விளக்கவுதாரணங்களின் பின்னே அமைக்கப்பட்டுள. சூத்திரத்தின் பொருளே மேலே விதியாகவும் விளக்கமாகவும் அமைந்திருத்தலின் சூத்திரங்களுக்குத் தனியே உரை எழுதப்பட்டிலது.

உள்ளுறையிற் கண்ட பொருள்களே பாட திட்டத்தில் உள்ளவையாதலின் பாட திட்டம் தனியாகக் காட்டப்படவில்லை.

மாணவ மாணவிகளுக்கு இலக்கண அறிவு நன்கமையவேண்டுமென்ற கருத்தோடு சிறந்த முறையில் இவ்விலக்கணத்தை எழுதியுள்ளேனாதலின் இது அவர்கட்குப் பெரிதும் பயன்படுமென்று நம்புகின்றேன்.

இதனை ஆசிரியர்கள் தங்கள் தங்கள் பள்ளியிற் பாட புத்தகமாக வைத்தருள்வாராக.

"சேக்கிழார் தமிழகம்"
மேலைச் சிந்தாமணி
திருச்சிராப்பள்ளி
25—4—1949

ம. பெரியசாமிப் பிள்ளை,
ஆசிரியர்.

உள்ளுறை

பொருள்		பக்கம்
I எழுத்து		1
1. முதலெழுத்து உயிர் : குறில், நெடில், சுட்டு, வினா மெய் : வல்லினம், மெல்லினம், இடையினம்	....	1
2. சார்பெழுத்து உயிர்மெய் ஆய்தம் குற்றியலுகரம் குற்றியலிகரம்	....	5—8
3. எழுத்தொலி வேறுபாடு:	...	8
ர—ற; ல—ள—ழ; ந—ண—ன	....	8—11
4. மாத்திரை	....	11—12
5. போலி	...	12
II சொல்	...	13
1. பகுபதம், பகாப்பதம்	....	13—14
2. சொல்வகை : பெயர், வினை, இடை, உரி	...	15—16
3. பெயர்ச்சொற்கள் அறுவகைப் பெயர்	...	16—18
வினையாலணையும் பெயர்	...	18—19
ஆகுபெயர்	...	19—20
திணை, பால், எண், இடம்	....	21—24
வேற்றுமை	...	24—30
4. வினைச் சொல்:	...	31—39
வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் செயப்படுபொருள் குன்றாவினை, குன்றியவினை	...	39
உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை	....	39—41
5. இடைச்சொல்	....	43—44
6. உரிச்சொல்	...	44

பொருள் பக்கம்

III பொது

தொகை நிலைத்தொடர், தொகா நிலைத்தொடர் ... 45—46

IV புணர்ச்சி

நிலைமொழி வருமொழி ... 46—47
வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி.... 47—50
இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி ... 51—52
உடம்படு மெய் ... 53
தோன்றல், திரிதல், கெடுதல் ... 53—56
குற்றியலுகரப் புணர்ச்சி ... 55—56

V யாப்பு

செய்யுளின் பொதுவிலக்கணம் ... 59—65

VI அணி ... 65

உவமையணி .... 65—67
உருவகவணி ... 67—68

மொழிப் பயிற்சி

I வாக்கியம் ... 69
தனி வாக்கியம் ... 70
தொடர்வாக்கியம் ... 70—72
கலவை வாக்கியம் ... 72—74

II வாக்கியப் பொருத்தம் .... 75—76
திணை, பால், எண், இடம் முதலியவை பொருந்தியிருத்தல்

III எழுத்துப் பிழைகளும் திருத்தமும் ... 77—80

IV வாக்கியமுடிவுப் பிழைகளும் திருத்தமும் ... 80—81

V வாக்கிய மாற்றம் ... 81—82

VI நிறுத்துக் குறிகள் ... 84—85

VII வல்லெழுத்து மிகுமிடமும் மிகாவிடமும் ... 87—89

புதிய தமிழ் இலக்கணம்

நான்காம் படிவம்

எழுத்து

1. எழுத்தென்பது ஒரு சொல் தோன்றுவதற்குக் காரணமாகும் ஒலி. எழுதுங்கால் அவ்வொலி வரி அல்லது கோடாக அமைக்கப்படும். எனவே, எழுத்திற்கு ஒலி வடிவு, வரி வடிவு என இரண்டு வடிவங்கள் உளவாகும்.

சொற்களைச் சொல்லும்பொழுது ஒலி வடிவமாக நமது காதில் விழுகின்ற எழுத்து 'ஒலி வடிவெழுத்து' எனவும், எழுதும்பொழுது வரி வடிவமாக நமது கண்ணுக்குத் தோன்றுகின்ற எழுத்து 'வரி வடிவெழுத்து' எனவும் கூறப்படும்.

எழுதப்படும் வரிவடிவம் சொல்லப்படும் ஒலி வடிவத்தை உணர்த்தற்குரிய அறிகுறியாகும்.

(உ - ம்) பழம் — இதில், மூன்று வரி வடிவெழுத்துக்கள் உள்ளன. ப ழ ம் என ஒலித்து மூன்று ஒலிவடிவும் காண்க.

2. தமிழில் உள்ள எழுத்துக்கள் முதலெழுத்தெனவும் சார்பெழுத்தெனவும் இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்படும்.

முதலெழுத்து

3. முதலெழுத்தென்பவை முதன்மையான எழுத்துக்கள்; அதாவது மற்றைய எழுத்துக்கள் தோன்றுதற்குக் காரணமாகும் எழுத்துக்கள்.

உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் ஆக முப்பதெழுத்துக்களும் முதலெழுத்தாகும்.

ந. சூ. உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே. (௬)

உயிரெழுத்து

4. உயிரெழுத்தென்பது உயிர் போன்ற எழுத்து. அஃதாவது, உடம்பின் உதவியின்றித் தானே இயங்கக் கூடிய உயிர்போல, மெய்யெழுத்தின் உதவியின்றித் தானே ஒலிக்கக்கூடிய எழுத்து.

உயிரெழுத்துக்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ எனப் பன்னிரண்டாம்.

5. உயிரெழுத்துக்கள் குறில், நெடில் என இரு வகைப்படும்.

குறில்

6. குறில் என்பது குற்றெழுத்து. குற்றெழுத்தாவது குறுகிய ஓசையுடைய எழுத்து. அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறிலாம்.

நெடில்

7. நெடில் என்பது நெட்டெழுத்து. நெட்டெழுத்தாவது, நீண்ட ஓசையுடைய எழுத்து. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நெடிலாம்.

மெய்யெழுத்து

8. மெய்யெழுத்தென்பது மெய் போன்ற எழுத்து; [மெய் - உடம்பு.] அஃதாவது உயிரின் உதவியின்றித் தானே இயங்கமாட்டாத மெய்போல, உயிரெழுத்தின் உதவியின்றித் தானே ஒலிக்கும் ஆற்றலில்லாத எழுத்து.

மெய்யெழுத்துக்கள் க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் எனப் பதினெட்டாம்.

குறிப்பு:— மெய்யெழுத்துக்களெல்லாம் புள்ளியுடையவை. மெய் யெழுத்துக்கள் தாமாகவே ஒலிக்கும் ஆற்றலில்லாதவை யாதலால், அவற்றை உச்சரிக்கும்போது 'அ' என்னும் உயிரைச் சேர்த்து க, ங, ச என்றிங்ஙனம் சொல்லுதல் மரபு. க், ங், ச் என மெய்யெழுத்துக்கள் புள்ளி வைத்தெழுதப் பட்டிருப்பினும் அவைகளின் பெயரைக் கூறும் பொழுது க, ங, ச என்றே னும், ககரம் ஙகரம், சகரம் என்றேனும் ககரமெய், ஙகரமெய், சகரமெய் என்றேனும் ககரவொற்று, ஙகரவொற்று, சகரவொற்று என்றேனும் கூற வேண்டும். மெய், ஒற்று, உடம்பு, உடல், புள்ளி, உறப்பு என்பவை ஒரு பொருள் குறித்த பல சொற்கள்.

9. மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும்.

வல்லினம்

10. வல்லினம் என்பது வன்மையாக ஒலிக்கும் எழுத்துக்களின் கூட்டம். வல்லின மெய்கள் க், ச், ட், த், ப், ற் என ஆறாகும்.

வல்லினத்துக்கு வலி, வன்மை எனவும் பெயர் உண்டு.

மெல்லினம்

11. மெல்லினம் என்பது மென்மையாக ஒலிக்கும் எழுத்துக்களின் கூட்டம். மெல்லின மெய்கள் ங், ஞ், ண், ந், ம், ன் என ஆறாகும்.

மெல்லினத்துக்கு மெலி, மென்மை எனவும் பெயர் உண்டு.

இடையினம்

12. இடையினம் என்பது இடைத்தரமாக ஒலிக்கும் எழுத்துக்களின் கூட்டம். இடையின மெய்கள் ய், ர், ல், வ், ழ், ள் என ஆறாகும்.

இடையினத்துக்கு இடை, இடைமை எனவும் பெயர் உண்டு.

இடைத்தரமாக ஒலித்தலாவது வல்லோசையு மாகாமல் மெல்லோசையு மாகாமல் அவ்விரண்டுக்கும் நடுத்தரமாக ஒலித்தல். இங்ஙனம் ஒலித்தல் 'நலிதல்' எனப்படும்.

குறிப்பு:— வல்லின மெல்லின இடையின மெய்களை ஒலித்து, முறையே, அவற்றின் வல்லோசை, மெல்லோசை, நலிவோசை இவற்றை உணர்க.

சுட்டெழுத்து

13. சுட்டெழுத் தென்பது சுட்டுப் பொருளில் வரும் எழுத்து. சுட்டுப் பொருள்—ஒன்றைக் குறித்துக் காட்டுதலாகிய பொருள். சுட்டுதல்—குறித்துக் காட்டுதல்.

அ, இ, உ இம் மூன்றும் ஒரு சொல்லுக்கு முதலில் நின்று சுட்டுப் பொருளைத் தருமாயின் சுட்டெழுத்தாகும்.

(உ - ம்) அவன் ; அப் பையன்.
இவள் ; இம் மனிதன்.
உது ; உப் பக்கம்.

குறிப்பு:—அகரம் தூரத்திலுள்ள பொருளையும் இகரம் சமீபத்திலுள்ள பொருளையும் உகரம் பின்புறத்திலும் நடுவிலும் மேலிடத்திலுமுள்ள பொருளையும் சுட்டிக் காட்டும். உகரச் சுட்டு உலக வழக்கில் வராது; செய்யுளிலேயே வரும்.

ந. சூ. அ இ உம்முதல் தனிவரிற் சுட்டே. (உ)

வினவெழுத்து

14. வினவெழுத்தென்பது வினவுதற் பொருளில் வரும் எழுத்து.

எ, யா என்னும் இரண்டும் சொல்லுக்கு முதலிலும், ஆ, ஓ என்னும் இரண்டும் சொல்லுக் கிறுதியிலும், ஏ என்பது முதல் இறுதியாகிய இரண்டிடத்திலும் நின்று வினப் பொருளைத் தருமாயின் வினவெழுத்தாகும்.

(உ - ம்.)

எவன்? எம்மனிதன்? யாது? யாங்ஙனம்?	எ, யா இரண்டும் மொழிக்கு முதலில் வினப்பொருளில் வந்தன.
வந்தானா? சென்றாயோ	ஆ, ஓ இரண்டும் மொழிக்கிறுதியில் வினப்பொருளில் வந்தன.
ஏவன்? கந்தனே?	ஏகாரம் மொழிக்கு முதல் இறுதி ஆகிய இரண்டிடத்திலும் வினப் பொருளில் வந்தது.

ந. சூ. எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினவா கும்மே (ரு)

குறிப்பு :—சுட்டெழுத்தும் வினவெழுத்தும் சுட்டுப்பொருளையும் வினப்பொருளையும் தருதலால், முறையே, சுட்டிடைச் சொல் எனவும் வினவிடைச் சொல் எனவும் கூறப்படும்.

சார்பெழுத்து

15. சார்பெழுத் தென்பவை முதலெழுத்துக்களின் சார்பினல் உளவாகும் எழுத்துக்கள். [சார்பு - சேர்க்கை, துணை.]

சார்பெழுத்துக்கள் உயிர்மெய், ஆய்தம், குற்றியலு கரம், குற்றியலிகரம் முதலாகப் பலவகைப்படும்.

உயிர்மெய்

16. உயிர்மெய்யெழுத்தாவது உயிரெழுத்து மெய் யெழுத்தோடு கூடுதலால் உளதாகும் எழுத்து.

பதினெட்டு மெய்யோடு பன்னிரண்டு உயிரும் தனித் தனியே கூடுதலால் உண்டாகும் உயிர்மெய்யெழுத்துக்கள் ($18 \times 12 = 216$) இருநூற்றுப் பதினறுகும். அவை க முதல் னௌ இறுதியாக உள்ளவை.

ஆய்தம்

17. ஆய்தவெழுத் தென்பது ஒருவகை நுணுகிய ஓசையுள்ள எழுத்து. அது வரிவடிவில் ஃ இங்ஙனம் மூன்று புள்ளி வடிவமாக எழுதப்படும்.

இவ் வாய்தம் குற்றெழுத்துக்கு முன்னும் உயிரோடு கூடிய வல்லெழுத்துக்கள் ஆறன் பின்னுமாக மொழிக்கு இடையில் வரும்; மொழிக்கு முதலிலும் ஈற்றிலும் வராது.

(உ - ம்.) எஃகு; கஃசு; அஃது; பஃறி,
[கஃசு - காற்பலம். பஃறி - ஓடம்.]

குறிப்பு:—ஆய்தம் தனியே வராது முன்னும் பின்னும் தனக்குச் சார்பாகவுள்ள சில எழுத்துக்களின் துணைபற்றி வருதலால் சார்பெழுத்தாயிற்று.

குற்றியலுகரம்

18. குற்றியலுகரம் என்பது தனக்குள்ள ஓசையிற் குறைந்து வரும் உகரம்.

தனி நெடிலும், பிற எழுத்துக்களோடு வரும் ஆய்தம், உயிர், வல்லினமெய், மெல்லினமெய், இடையினமெய் என்பவைகளும் ஈற்றயலெழுத்தாகத் தொடர்ந்து நிற்கும் மொழியின் இறுதியில் வல்லினமெய்யோடு கூடிவரும் உகரம் தனக்குரிய ஓசையிற் குறையும். அத்தகைய உகரமே குற்றியலுகரமாம்.

அது ஈற்றயலெழுத்தை நோக்கி ஆறுவகைப்படும். ஈற்றயலெழுத்துத் தனிநெடிலாக இருப்பின் நெடிற்றொடர்க் குற்றியலுகரம் ஆகும். ஈற்றயலெழுத்து ஆய்தம், உயிர், வலி, மெலி, இடை என்பவைகளாக இருப்பின், முறையே, ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம், வன்றொடர்க் குற்றியலுகரம், மென்றொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆம்.

(உ-ம்) ஆறு, சேறு }—நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.
எஃகு, வெஃகு }—ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.
அரசு, முரசு }—உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.
பத்து, கத்து }—வன்றொடர்க் குற்றியலுகரம்.
வண்டு, கண்டு }—மென்றொடர்க் குற்றியலுகரம்.
மார்பு, சார்பு }—இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

குறிப்பு:—நெடிற்றொடர் ஈரெழுத் தொருமொழியாகவே இருக்கும்; மற்றைய தொடர்கள் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துள்ள மொழிகளாகவே இருக்கும். உயிர்த்தொடருக்கு ஈற்றயலெழுத்து உயிர்மெய்யாக இருக்கும்; வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் இம்மூன்றுக்கும் ஈற்றய லெழுத்து மெய்யெழுத்தாக இருக்கும். இரு குறிலாலாகிய மொழிகளில் குற்றியலுகரம் இராது.

குற்றியலிகரம்

19. குற்றியலிகரம் என்பது தனக்குள்ள ஓசையிற் குறைந்து வரும் இகரம்.

வருமொழி முதலில் யகரம் வரும்போது நிலைமொழி ஈற்றிலுள்ள குற்றியலுகரம் இகரமாகத்திரியு மாதலின், அங்ஙனம் திரிந்த இகரமும் அசைச் சொல்லாகிய மியா என் பதிலுள்ள இகரமும் தமக்குரிய ஓசையிற் குறுகும்.

(உ-ம்) வீடு + யாது = வீடியாது.
பந்து + யாது = பந்தியாது.
கேள் + மியா = கேண்மியா.
சொல் + மியா = சொன்மியா.

பயிற்சி

I. 1. முதலெழுத்து, சார்பெழுத்து—இத் தொடர்களின் பெயர்க்காரணத்தை விளக்குக.

2. முதலெழுத்துக்கள் யாவை? அவற்றின் உட்பிரிவுகள் எவை?

3. சுட்டுப் பொருளிலும் வினப் பொருளிலும் வரக்கூடிய எழுத்துக்கள் யாவை?

II. 1. உயிர்மெய்யும் ஆய்தமும் சார்பெழுத்தாதல் எங்ஙனம்?

2. குற்றியலுகரம், குற்றியலிகரம் இவைகளை விளக்குக.

3. கீழ்க்காணும் தொடர்களிலுள்ள குற்றியலுகர குற்றிய லிகரங்களைக் குறிக்க:—

யானைக் கன்று; நல்ல வீடு; மார்பு வலி; வரவியாது; மாக் கதவு; செடி நடு; பூவரசு; வல்லெழுத்து; மாடி யாது; சிட்டுக் கனி; ஈச் சிறகு; பாக்கு வெட்டி; சுடு சோறு.

III. கீழ்வரும் குற்றுகரங்களுள் ஒவ்வொன்றும் என்ன தொடர்?

கூறு; வாகு; எஃகு; கத்து; உண்டு; நல்கு; ஓது; வெஃகு; சிறகு; அச்சு; அம்பு; சார்பு; கடுகு; மென்று; காடு.

எழுத்தொலி வேறுபாடு

20. தமிழில் உள்ள எழுத்துக்களுள் சிலவற்றை ஒன்று போல உச்சரிக்கத் தோன்றும். ஆயினும், அவற்றின் ஒலி வேறுபாட்டை நன்குணர்ந்து உச்சரிக்கவேண்டும். அங்ஙனம் உச்சரிக்காவிடில் பொருள் வேறுபடும்; சில இடங்களில் பொருட்பொருத்தமே இராது.

ற, ர

21. ற வல்லினத்தைச் சேர்ந்தது; ஆதலால், அது வல்லின றகரம் எனப்படும். ர இடையினத்தைச் சேர்ந்தது; ஆதலால், அது இடையின ரகரம் எனப்படும்.

இவற்றுள், வல்லின றகரத்தை மேல்வாயின் முன் பகுதியோடு நாவின் நுனியை நன்றாகப் பொருத்தி உச்சரிக்க வேண்டும். இடையின ரகரத்தை நுனி நாவினால் மேல்வாயின் முன்பகுதியைத் தடவி உச்சரிக்கவேண்டும்.

பயிற்சி

கீழ்க்கண்ட சொற்களை றகர ரகர ஒலி வேறுபாடு தோன்ற உச்சரித்து அவற்றின் பொருள் வேறுபாட்டையுங் காண்க:

அறம்; அரம். புறம்; புரம். மறம்; மரம். பறித்தல்; பரித்தல். தறித்தல்; தரித்தல். மறித்தல்; மரித்தல் கூறிய; கூரிய. சீறிய; சீரிய. தேறிய; தேரிய. அறிதல்; அரிதல். எறிதல்; எரிதல். கறத்தல்; கரத்தல். பறத்தல்; பரத்தல். குறவர்; குரவர்.

அறம் - தருமம்; அரம் - ஓர் ஆயுதம். புறம் - அயல், பின் பக்கம்; புரம் - நகரம். மறம் - பாவம், வீரம்; மரம் - மரம். பறித்தல் - பிடுங்குதல்; பரித்தல் - தாங்குதல். தறித்தல் - வெட்டுதல், நீக்குதல்; தரித்தல் - பூணுதல். மறித்தல் - தடுத்தல் மரித்தல் - சாதல். கூறிய - சொன்ன; கூரிய - கூர்மையான. சீறிய - வெகுண்ட; சீரிய சிறந்த, உயர்ந்த. தேறிய - தெளிந்த; தேரிய - ஆராய்ந்த. அறிதல் - தெரிந்து கொள்ளுதல்; அரிதல் - வாள் முதலிய கருவியால் அரிதல். எறிதல் - வீசுதல்; எரிதல் - தீ யெரிதல். கறத்தல் - வெளிப்படுத்தல்; கரத்தல் - மறைத்தல். பறத்தல் - பறந்து செல்லுதல்; பரத்தல் - பரவுதல். குறவர் - ஒருவகை மரபினர்; குரவர் - குரு, தந்தை, தாய் முதலிய பெரியோர்.

ல, ள, ழ

22. ல, ள, ழ இம் மூன்றும் இடையினத்தைச் சேர்ந்தவை. இவற்றுள், லகரத்தை மேல்வாய்ப் பற்களோடு நாவின் விளிம்பைப் பொருத்தி உச்சரிக்க வேண்டும்;

ளகரத்தை நாக்கை நன்ருக மடித்து அதனுல் மேல் வாயைத் தடவி உச்சரிக்க வேண்டும்; ழகரத்தை நாவைச் சிறிது மடித்து அதனுல் மேல்வாயைத் தடவி உச்சரிக்க வேண்டும்.

பயிற்சி

கீழ்க்கண்ட சொற்களை லகர ளகர ழகர ஒலி வேறுபாடு தோன்ற உச்சரித்து அவற்றின் பொருள் வேறுபாட்டையுங் காண்க:

தலை; தளை; தழை. இலை; இளை; இழை. கலை; களை; கழை. விலை; விளை; விழை. வலி; வளி; வழி. ஒலி; ஒளி; ஒழி. வால்; வாள்; வாழ். தால்; தாள்; தாழ். மூலை; மூளை; மூழை. கலித்தல்; களித்தல்; கழித்தல். காலை; காளை. வேலை; வேளை. பல்லம்; பள்ளம். வெல்லம்; வெள்ளம். வாளை; வாழை. முளை; முழை. குளி; குழி. விளித்தல்; விழித்தல். அளித்தல்; அழித்தல்.

தளை - கட்டு. கழை - மூங்கில், கரும்பு. விழை - விரும்பு. வளி - காற்று. தால் - நாக்கு. முழை - துடுப்பு, அகப்பை. கலித்தல் - ஒலித்தல், தழைத்தல். பல்லம் - அம்பு. வாளை - ஒருவகை மீன். முழை - குகை. விளித்தல் - கூப்பிடுதல், அழைத்தல். விழித்தல் - கண் திறத்தல். அளித்தல் - அருளோடு கொடுத்தல், பாதுகாத்தல்.

ண, ந, ன

23. ண, ந, ன இம் மூன்றும் மெல்லினத்தைச் சேர்ந்தவை. இவை முறையே **டண்ணகரம்**, **தந்நகரம்**, **றன்னகரம்** என்று கூறப்படும்.

இவற்றுள், ணகரத்தை மேல்வாயின் முன்பகுதியோடு நாவின் நுனியை வளைத்துப் பொருத்தி உச்சரிக்க வேண்டும்; நகரத்தை மேல்வாய்ப் பல்லின் அடிப்பகுதியோடு நாவின் நுனியைப் பொருத்தி உச்சரிக்கவேண்டும்;

ணகரத்தை மேல்வாயின் முன் பகுதியோடு நாவின் நுனியை நன்ருகப் பொருத்தி உச்சரிக்க வேண்டும்.

குறிப்பு:—ணகரம் டகரத்தை யடுத்து வருதலால் டண்ணகரம் எனவும், நகரம் தகரத்தை யடுத்து வருதலால் தந்நகரம் எனவும், னகரம் றகரத்தை யடுத்து வருதலால் றன்னகரம் எனவும் பெயர் பெற்றன.

பயிற்சி

கீழ்க்கண்டவற்றை ணகர நகர னகர ஒலி வேறுபாடுதோன்ற உச்சரிக்க; அவற்றுள் சிலவற்றின் பொருள் வேறுபாட்டையுங் காண்க:

வெண்ணெய்; எண்ணெய்; வெந்நீர்; செந்நீர்; தென்னை; புன்னை; தண்ணீர்; தெண்ணீர்; புனல்; கனல்; நாணல்; கோணல்.

பனை; பணை. மனை; மணை. நண்ணுதல்; நன்னுதல். பண்ணல்; பன்னல். அன்னம்; அண்ணம். நன்னூல்; நந்நூல். உண்ணல்; உன்னல். காண்; கான். பேன்; பேண். துணி; துனி. கணி; கனி.

வெந்நீர் - சூடான நீர். செந்நீர் - செந்நிறமுள்ள நீர். தண்ணீர் - குளிந்த நீர். தெண்ணீர் - தெளிந்த நீர். புனல் - நீர். கனல் - நெருப்பு. பனை - ஓர் மரம். பணை - பெருமை, மூங்கில். மனை - வீடு; மணை - ஆசனப் பலகை. நண்ணுதல் - அடைதல்; நன்னுதல் - நல்ல (அழகிய) நெற்றி. பண்ணல் - செய்தல்; பன்னல் - பலபடக் கூறுதல். அன்னம் - சோறு, ஓர் பறவை; அண்ணம் - மேல்வாய். நன்னூல் - நல்ல நூல், ஓர் இலக்கண நூல்; நந்நூல் - நமது நூல். உண்ணல் - உட்கொள்ளல்; உன்னல் - எண்ணுதல், ஆராய்தல். காண் - பார்; கான் - காடு. பேன் - ஒரு பூச்சி; பேண் - போற்று. கணி - கணிப்போன், சோதிடன்; கனி - பழம், சுரங்கம்.

மாத்திரை

24. மாத்திரை என்பது எழுத்துக்களை ஒலித்தற்கு வேண்டிய கால அளவு.

ஒருமுறை கண் இமைத்தற்காவது கை நொடித்தற் காவது வேண்டிய காலம் ஒரு மாத்திரை எனப்படும்.

உயிரெழுத்துக்களுள் குறிலுக்கு ஒரு மாத்திரை; நெடிலுக்கு இரண்டு மாத்திரை. மெய்யெழுத்துக்கு அரை மாத்திரை. உயிர்மெய்க் குறிலுக்கு ஒரு மாத்திரை; உயிர்மெய் நெடிலுக்கு இரண்டு மாத்திரை. ஆய்தத்துக்கு அரை மாத்திரை. குற்றியலுகரத்திற்கும் குற்றியலிகரத் திற்கும் தனித்தனி அரை மாத்திரை.

போலி

25. போலி என்பது ஒன்று **போல** மற்றென்றுஇருப் பது. இங்கே, போலிஎன்பது போலிஎழுத்தைக்குறிக்கும்.

ஒரு சொல்லில் ஒரு எழுத்து இருக்குமிடத்தில் அவ வெழுத்துக்கு ஈடாக வேறொரு எழுத்து வரினும் அச் சொல்லின் பொருள்வேறுபடாதிருப்பின் அவ்வெழுத்துப் **போலி** எனப்படும்.

(உ - ம்.)

நலம்	நலன்	}	மகரத்திற்கு னகரம் போலி.
நிலம்	நிலன்		
பந்தல்	பந்தர்	}	லகரத்திற்கு ரகரம் போலி.
சாம்பல்	சாம்பர்		
சிறகு	சிறகர்	}	குற்றியலுகரத்திற்கு 'அர்' போலி
வண்டு	வண்டர்		
பயல்	பையல்	}	அகரத்திற்கு ஐகாரம் போலி.
அரசன்	அரைசன்		
ஐந்து	அஞ்சு		—சொல் முழுதும் போலி; ஐகாரத் துக்கு ஆகாரமும் நகரத்துக்கு ஞகரமும் தகரத் துக்குச் சகரமும் போலி.
நாயிறு	ஞாயிறு	}	நகரத்துக்கு ஞகரம் போலி.
ஐந்நூறு	ஐஞ்ஞூறு		

சொல்

26. எழுத்துக்கள் ஒவ்வொன்றாகத் தனித்தாயினும் இரண்டு முதலிய பலவாகத் தொடர்ந்தாயினும் ஒரு பொருளைத் தருமாயின் சொல்லாகும்.

சொல் மொழி எனவும் பதம் எனவும் கூறப்படும்.

(உ - ம்.) ஆ ; ஈ ; பூ ; சே ; வா ; போ—ஓரெழுத்து மொழிகள். (இவை தம் பெயரை யுணர்த்தும்போது எழுத்து ; வேறு பொருளைத் தரும்போது சொல். ஆ - பசு ; சே - எருது.)

நீர் ; சோறு ; காய் ; படி ; ஏடு ; ஈக—ஈரெழுத்து மொழிகள்.

நிலம் ; மரம் ; பழம் ; எழுது ; வருக—மூவெழுத்து மொழிகள்.

விளக்கு ; எழுத்து ; உண்டான் ; சென்றார்—நாலெழுத்து மொழிகள்.

உதாரணம் ; போகின்றாள் ; வருகிறான்—ஐந்தெழுத்து மொழிகள்.

குறிப்பு :—பலவெழுத்துக்கள் தொடர்ந்து மொழியாகும் பொழுது இரண்டெழுத்து முதல் ஒன்பதெழுத்து வரை தொடரும்.

மொழிகள் பகுபதம் எனவும் பகாப்பதம் எனவும் இருவகைப்படும்.

பகுபதம்

27. பகுபதமாவது பகுதி விகுதி முதலியனவாகப் பகுக்கக் கூடிய பதம்.

பகுதி விகுதி முதலியன பகுபதவுறுப்புக்கள். பகுபதத்தில் முதலில் நிற்கும் உறுப்பு **பகுதி**; இறுதியில் நிற்கும் உறுப்பு **விகுதி**; இடையில் நிற்கும் உறுப்பு **இடைநிலை**; மேற்கூறிய உறுப்புக்கள் ஒன்றோடொன்று கூடும்பொழுது எழுத்து மிகுதல் முதலியவை **சந்தி**.

(உ-ம்.) வாழ்க : வாழ்—பகுதி ; க—விகுதி.
அறிஞன் : அறி—பகுதி ; ஞ்—இடைநிலை ; அன்—விகுதி.
படித்தான் : படி—பகுதி ; த்—சந்தி ; த்—இடைநிலை.
ஆன்—விகுதி.

குறிப்பு :—மேற்காட்டியவற்றுள், க—வியங்கோள் வினைமுற்று விகுதி; ஞ்—பெயரிடை நிலை ; த்—இறந்தகால இடைநிலை ; அன், ஆன்—ஆண்பால் விகுதிகள்.

பகாப்பதம்

28. பகாப்பதமாவது பகுதி விகுதி முதலியனவாகப் பகுக்கக் கூடாத பதம்.

(உ-ம்.) சோறு ; கலம் ; நெருப்பு ; இறும்பூது—பெயர்ப் பகாப் பதம்.
வா ; உண் ; எழுது ; விரும்பு—வினைப் பகாப்பதம்.

மேலே காட்டியவைகளைப் பகுதி விகுதி முதலியன வாகப் பகுக்கக் கூடாமை காண்க.

நு. சூ. எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் ; அது பகாப் பதம்பகு பதமென
இருபா லாகி இயலும் என்ப.

குறிப்பு:—ப—ழம், வா—கு என்றிங்ஙனம் பிரித்தலால் பகுதி விகுதி முதலியன உளவாகாமையின் அங்ஙனம் பிரித்தல் பகுபதப் பகுப்பன்று.

பயிற்சி

கீழ்க் கண்டவற்றுள் பகுபதங்கள் எவை? பகாப்பதங்கள் எவை? பகுபதங்களைப் பகுதி விகுதி முதலியனவாகப் பகுத்துக் காட்டுக :

வலைஞன் ; பிடித்தான் ; வயல் ; கண் ; கலைஞன் ; வயிறு ; உழைத்தான் ; பழம் ; போவான் ; மாடு ; செய்கிறான் ; வீடு ; பொருப்பு ; சூழ்க ; பதுங்கு ; ஓடினான் ; கட்டுவர் ; ஓங்குக ; மழை ; மொழி ; கூனன் ; பாடல் ; இனிமை.

சொல்லின் வகை

29. சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

30. **பெயர்ச்சொல்:** ஏதேனும் ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல். பெயர்ச்சொல் வேற்றுமைகளை ஏற்கக்கூடியதாய்த் திணை பால் எண் இடம் இவற்றைத் தெரிவித்து நிற்கும்.

(உ - ம்.) முருகன் எனக்குக் கனிகள் தந்தான்.

'முருகன்', 'எனக்கு', 'கனிகள்', என்னும் பெயர்ச்சொற்கள் மேற்கூறியவாறு வந்துள்ளமை காண்க.

31. **வினைச்சொல்:** ஏதேனும் ஒன்றன் வினையைக் குறிக்கும் சொல் வினைச்சொல். [வினை - செயல், தொழில்.]

வினைச்சொல் காலத்தை ஏற்பதாய்த் தன் கருத்தாவுக்குரிய திணை பால் எண் இடம் இவற்றைத் தானும் ஏற்று நிற்கும்.

(உ - ம்.) முருகன் வள்ளியை மணந்தான்.

'மணந்தான்' என்னும் வினைச்சொல் இறந்த காலத்தை ஏற்று 'முருகன்' என்னும் கருத்தாவுக்குரிய திணை பால் எண் இடம் இவற்றைத் தானும் உடையதாக வந்திருத்தல் காண்க.

32. **இடைச்சொல்:** தனித்து வழங்குதலின்றிப் பெயர் வினைகளின் பின் முன் ஓரிடத்தில் வருகின்ற சொல் இடைச்சொல். [இடை - இடம்.]

(உ - ம்.) இராமன் அவ்வளவு சோற்றையும் உண்டான்.

இதனில் அ, ஐ, உம், ட், ஆன் என்பவை பெயர்வினைகளின் முன்னும் பின்னும் வந்துள்ளமை காண்க. இவைகள் தனித்தனியே கருதப்படும்பொழுது இடைச்சொற்களாம். இவை முறையே சுட்டிடைச்சொல், உருபிடைச்சொல், உம்மையிடைச்சொல், இடைநிலை இடைச்சொல், விகுதியிடைச்சொல் எனக் கூறப்படும்.

குறிப்பு:—மேலே காட்டிய இடைச்சொற்கள் தனித்தனியாகக் கருதப் படாதபொழுது அவை சார்ந்துள்ள பெயர் வினைகளில் அடங்கிவிடும்.

33. **உரிச்சொல்:** குணத்தை உணர்த்திப் பெயர் வினை களை விட்டு நீங்காது அவற்றோடு சேர்ந்து வருவதற்குரிய சொல் உரிச்சொல்.

(உ-ம்) சாலப் பெரிது; தவப் பிஞ்சு; நனி தின்றான்—சால, தவ, நனி என்பன 'மிகுதல்' என்னும் குணத்தை உணர்த்தும் உரிச் சொற்கள்.

குறிப்பு:—உரிச்சொற்கள், பெரும்பாலும், செய்யுளில் வருதலால், செய்யுட்குரிய சொல் என்னும் காரணம் பற்றி 'உரிச்சொல்' எனப் பெயர் பெற்றன என்று கூறுதலும் உண்டு.

பெயர்ச்சொற்களின் வகை

34. பெயர்ச்சொற்கள் பற்பல வகையாகக் கூறப் படுமேனும் அவையெல்லாம் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்னும் அறுவகைப் பெயர்களுள் அடங்கும்.

35. **பொருட்பெயர்:** ஏதேனும் ஒரு பொருளின் பெயராய் வருவது பொருட்பெயர்.

(உ-ம்) முருகன், மாடு, மயில், மரம், மண், கல், குடை, உடை.

36. **இடப்பெயர்:** ஏதேனும் ஒரு இடத்தின் பெயராய் வருவது இடப்பெயர்.

(உ-ம்) உறந்தை, சென்னை, மதுரை, திருவானைக்கா, சீனு, நிலம், வயல்.

37. **காலப்பெயர்:** ஏதேனும் ஒரு காலத்தின் பெயராய் வருவது காலப்பெயர்.

(உ-ம்) சருவதாரி, மார்கழி, சனிக்கிழமை, பகல், இரவு, காலை, மாலை.

38. சினைப்பெயர்: ஏதேனும் ஒரு சினையின் பெயராய் வருவது சினைப்பெயர். (சினை - உறுப்பு, அவயவம்.)

(உ - ம்) தலை, கை, கால், வேர், கிளை, வால், கொம்பு.

39. குணப்பெயர்: ஏதேனும் ஒரு குணத்தின் பெயராய் வருவது குணப்பெயர். [குணப்பெயர் பண்புப் பெயர் என்றும் கூறப்படும். பண்பு - குணம்.]

(உ - ம்) வெண்மை, கருமை, பெருமை, சிறுமை, அன்பு, அருள், அழகு, காதல்.

40. தொழிற்பெயர்: ஏதேனும் ஒரு தொழிலின் பெயராய் வருவது தொழிற்பெயர். தொழிற்பெயர் பெரும்பாலும் விகுதி பெற்றே வரும்.

தொழிற்பெயர் விகுதிகளாவன:—தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை முதலியன. இவ் விகுதிகளுள் ஒன்றைப் பெற்றுவரும் தொழிற் பெயர் விகுதிபெற்ற தொழிற்பெயர் எனப்படும்.

(உ - ம்) நடத்தல், கூடல், ஓட்டம், கொலை, வருகை, கோவை, போக்கு, துடிப்பு, வரவு, மறதி, பயிற்சி, தோல்வி, செய்யுள், நோக்காடு, கூப்பாடு, தோற்றரவு (- தோன்றுதல்), வாரானை (- வருதல்), செய்யாமை.

இனி, இத் தொழிற்பெயர் விகுதி பெறாது முதனிலை (- பகுதி) மாத்திரமாகவும், முதனிலை திரிந்தும் சிறுபான்மை வருதல் உண்டு. இவை முறையே முதனிலைத் தொழிற் பெயர் எனவும் முதனிலை திரிந்த தொழிற் பெயர்எனவும் கூறப்படும்.

(உ - ம்) பிடி, அடி, உரை, கெடு—முதனிலைத் தொழிற்பெயர்.
பேறு, ஈடு, கேடு, கோள்—முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

பிடி, அடி, உரை, கெடு என்னும் பகுதிகள் முறையே பிடித்தல், அடித்தல், உரைத்தல், கெடுதல் என்னும் பொருளைத் தரும்போது முதநிலைத் தொழிற் பெயராம்.

பெறு, இடு, கெடு, கொள் என்னும் பகுதிகள், முறையே, பேறு, ஈடு, கேடு, கோள் எனத்திரிந்து பெறுதல், இடுதல், கெடுதல், கொள்கை என்னும் பொருளில் வந்தமையால் பேறு முதலியவை முதனிலை திரிந்த தொழிற் பெயர்களாயின.

பயிற்சி

1. கீழ்க்காணும் பெயர்களுள் ஒவ்வொன்றும் அறுவகைப் பெயர்களில் எதனைச் சார்ந்தது ?

படித்தல், பசுமை, கண், ஆண்டு, சேலம், கந்தன், குதிரை சிதம்பரம், ஐப்பசி, காது, நன்மை, ஆட்டம், காட்சி, இன்பம், இலை, நாழிகை, தஞ்சாவூர், ஆடை, சோறு, திருவரங்கம், வியாழன், குளம்பு, சாக்காடு, பிறப்பு.

2. தொழிற் பெயர்களில் மூவகை யாவை? ஒவ்வொரு வகைக்கும் இரண்டிரண்டு உதாரணங்கள் வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

வினையாலணையும் பெயர்

41. வினையாலணையும்பெயர் என்பது ஒரு வினையால் அணையப்படும் பெயர். அஃதாவது ஒரு வினை சம்பந்தமாகத் தோன்றும் பெயர்.

ஒரு வினைமுற்றே பெயராகி வேற்றுமையுருபை ஏற்று வரின் வினையாலணையும் பெயராகும். 'கண்டானைக் கேட்டேன்' என்பதில், 'கண்டான்' என்னும் வினைமுற்று, காணுதலாகிய செயலோடு சம்பந்தப்பட்ட ஒருவனைக் குறித்து, இரண்டாம் வேற்றுமை ஏற்று வந்தது. இங்ஙனம் வருவதே வினையாலணையும் பெயர்.

வினைமுற்றுவினையாலணையும்பெயராகும்போது சிறிது திரிந்தும்வரும். 'கண்டான்'என்பது 'கண்டவன்' எனவும் 'நிற்கிறான்' என்பது 'நிற்கிறவன்' எனவும் 'உண்பான்

என்பது 'உண்பவன்' எனவும் இங்ஙனம் திரிந்து வருதல் காண்க.

(உ - ம்) 1. பஞ்சவர்க்குத் தூது நடந்தானை ஏத்து.
2. போகின்றவனைக் கூப்பிடாதே.
3. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.
4. இவர்கள் நாளை வெளியூர் செல்பவர்.

குறிப்பு :—வினையாலணையும் பெயர் உரைநடையில் பெரும்பாலும் திரிந்தே வரும்.

பயிற்சி

I கீழ்க்காணும் வாக்கியங்களிலுள்ள வினையாலணையும் பெயர்களைக் குறிக்க :

1. நன்றாகப் படித்தவர்கள் பரீட்சையில் தேறினர்.
2. இடர் தீர்த்தாரை என்றும் மறவேல்.
3. உழைப்பவனுக்கு ஊதியம் கிடைக்கும்.
4. விரைந்தோடினவன் இடறி வீழ்ந்தான்.

II அடியிற்காணும் வினைமுற்றுக்களை வினையாலணையும் பெயர்களாக்கி வாக்கியங்களில் அமைக்க.

பாடினாள் ; ஓடுகின்றான் ; உறங்குவார்; மேய்ந்தது; பருகின; உண்டனர்; செல்வார்; காண்பான்; பறந்தது.

ஆகுபெயர்

42. ஆகுபெயர் என்பது ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குப் பெயராகி வருவது.

ஒரு பொருளின் இயற்பெயர் அதனை முடிக்க வருஞ் சொல்லோடு பொருந்தாத பொழுது அவ்வியற்பெயர் அப்பொருளோடு சம்பந்தப்பட்ட மற்றொரு பொருளுக்கு ஆகுபெயராகக் கொள்ளப்படும். 'காளை வந்தான்' என்பதில் 'காளை' என்பது ஒன்றன்பாற் பெயர்; அதனை முடிக்குஞ் சொல்லாகிய 'வந்தான்' என்பது ஆண்பால் வினைமுற்று.

எனவே, காளை என்பது வந்தான் என்பதோடு பொருந்த வில்லை. ஆதலால், இங்கே காளை என்னும் மாட்டின்பெயர் அது போன்ற இளம் பருவமுள்ள ஒரு மனிதனுக்குப் பெயராயிற்று. இங்ஙனம் ஆவதே ஆகுபெயர்.

(உ - ம்) 1. வெள்ளை உழுதது—'வெள்ளை' என்னும் நிறத்தின் பெயர் அந்நிறத்தையுடைய மாட்டுக்கு ஆகுபெயர். (நிறம் ஒரு பண்பு.)

2. பொங்கல் உண்போம்— 'பொங்கல்' (பொங்குதல்) பொங்குதல் என்னும் தொழிலின் பெயர் அத்தொழிலை யடைந்த உணவுக்கு ஆகுபெயர்.

3. ஊர் திரண்டது—ஊர் என்னும் இடத்தின் பெயர் அவ் விடத்திலுள்ள மக்களுக்கு ஆகுபெயர்.

4. கார் விளைந்தது — கார் என்னும் மழைக்காலத்தின் பெயர் அக்காலத்திற் விளையும் நெல்லுக்கு ஆகுபெயர்.

குறிப்பு:—கார் - கருநிறம். கார் என்பது முதலில் அந்நிறத்தையுடைய மேகத்துக்கும் பின் அம்மேகம் பெய்யும் மழைக் காலத்துக்கும் அதன்பின் அக்காலத்தில் விளையும் நெல்லுக்கும் ஆகு பெயராக வரும்.

பயிற்சி

கீழ்க்காணும் வாக்கியங்களில் ஆகுபெயராகவுள்ள சொற்கள் எவை?

1. வண்ணான் வெள்ளை கொணர்ந்தான்.

2. முருகன் துவையல் உண்டான்.

3. கலகம் நடக்கும்போது ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப் படும்.

4. மயிலின் தோகை அழகு வாய்ந்தது.

5. அத்தோகை இனிமையாகப் பாடினள்.

6. கண்ணன் காரொளி வண்ணன்.

7. கார் மழை பொழிந்தது.

திணை

43. திணை என்பது ஒழுக்கம். உலகத்திலுள்ள பொருள்கள், ஒழுக்கம்பற்றி, உயர்திணை எனவும் அஃறிணை எனவும் இரு பெரும்பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. திணை பற்றிய பிரிவு திணை எனப்பட்டது.

44. உயர்திணை: உயர்திணை என்பது உயர்வாகிய திணை. மக்களும் தேவரும் உயர்திணைக் குரியவர்.

கீழுலக வாசிகள் என்பவராகிய நரகரும் உயர்திணைக் குரியவராகக் கூறப்படுவர்.

45. அஃறிணை: அஃறிணை என்பது உயர்வல்லாத தாகிய திணை; அஃதாவது தாழ்வாகிய திணை. [அல் + திணை = அஃறிணை] உயர்திணையல்லாத மற்றை உயிருள்ளவை இல்லாதவை ஆகிய எல்லாப் பொருள்களும் அஃறிணைக் குரியன.

குறிப்பு:—மக்களின் உயிரையும் உடம்பையும் தனித்தனியே கூறும்பொழுது அவைகளும் அஃறிணையாம். 'உடம்பு வீங்கிற்று,' 'உயிர் நீங்கிற்று' என வருதல் காண்க. கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் கூறுதல் மரபு.

ந. சூ. மக்கள் தேவர் நரகர் உயர்திணை;
மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை. (உ)

பால்

46. பால் என்பது தன்மை அல்லது பகுப்பு. திணையின் உட்பிரிவு பால் என வழங்கப்படும். பால் ஐந்து வகைப்படும்.

47. உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூவகையாகவும் அஃறிணை ஒன்றன்பால், பலவின் பால் என இருவகையாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

48. ஒரு ஆணைக் குறிப்பது ஆண்பால்; ஒரு பெண்ணைக் குறிப்பது பெண் பால்; பலரைக் குறிப்பது பலர்

பால்; ஒரு அஃறிணைப் பொருளைக் குறிப்பது ஒன்றன் பால்; பல அஃறிணைப் பொருள்களைக் குறிப்பது பலவின் பால்.

(உ - ம்.) முருகன், நம்பி, அரசன், இடையன்—ஆண்பால்.
வள்ளி, நங்கை, அரசி, இடைச்சி—பெண்பால்.
மக்கள், அரசியர், இடையர், தேவர்கள்—பலர்பால்.
பசு, காளை, சேவல், கல், மண்—ஒன்றன்பால்.
மாடுகள், மரங்கள், பறவைகள், புழுக்கள்—பலவின்பால்.

குறிப்பு:—உயர்திணையில் ஒருவருக்கு மேற்பட்டவர் ஆண்களாயிருப்பினும் பெண்களாயிருப்பினும் பலர்பாலே. அஃறிணைப் பொருள்களுள் உயிருள்ளவைகளில் ஆண் பெண் என்னும் பிரிவு இருப்பினும் அவை ஆண்பால் பெண்பால் எனக் கூறப்படுதல் இல்லை.

ந. சூ. ஆண்பெண் பலரென முப்பாற் றுயர்திணை. (௩)
ந. சூ. ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை. (௪)

எண்

49. எண் என்பது பொருள்களின் எண்ணிக்கை. அஃது ஒருமை பன்மை என இருவகைப்படும்.

ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை. இரண்டு முதல் பல பொருள்களைக் குறிப்பது பன்மை.

ஒருமை

(உ - ம்.) முருகன் வந்தான்—ஆண்பால்
வள்ளி வந்தனள்—பெண்பால்
காளை வந்தது—ஒன்றன் பால்.

பன்மை

மக்கள் வந்தனர்—பலர்பால்
காளைகள் வந்தன—பலவின்பால்.

குறிப்பு:—ஐந்து பால்களுள் ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் இம்மூன்றும் ஒருமை எண்ணுக்குரியன; பலர்பால் பலவின்பால் இவ்விரண்டும் பன்மை எண்ணுக்குரியன.

இடம்

50. இடம் என்பது சொற்கள் வழங்குதற்குரிய இடம். அஃது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

பேசுவோன் தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் குறிப்பது **தன்மை**யிடம்; முன்னிற்போரைக் குறிப்பது **முன்னிலை**யிடம்; தன்மை முன்னிலைகளின் நீங்கிய மற்றை யெல்லாவற்றையும் குறிப்பது **படர்க்கை**யிடம். படர்தல்—செல்லுதல், நீங்குதல்.

தன்மை

(உ - ம்) யான் சென்றேன் } ஒருமை.
நான் சென்றேன்

யாம் சென்றோம் } பன்மை.
நாம் சென்றோம்

முன்னிலை

நீ சென்றாய் —ஒருமை.

நீர் சென்றீர் } பன்மை.
நீவிர் சென்றீர்
நீயிர் சென்றீர்
எல்லீரும் சென்றீர்

படர்க்கை

அரசன் சென்றான்—ஆண்பால் } உயர்திணை.
அரசி சென்றாள்—பெண்பால்
மாந்தர் சென்றனர்—பலர்பால்

மாடு சென்றது—ஒன்றன்பால் } அஃறிணை.
மாடுகள் சென்றன—பலவின்பால்

'எல்லாம்' என்னும் பெயர் மூவிடத்துக்கும் பொதுவாக வரும். 'நாமெல்லாம்; நீங்களெல்லாம்; அவர்களெல்லாம்' என வருதல் காண்க.

குறிப்பு :—'யாங்கள்', 'நாங்கள்' என வரும் தன்மைப் பன்மைப் பெயர்களையும், 'நீங்கள்' என வரும் முன்னிலைப் பன்மைப் பெயரையும் ஈண்டே கொள்க. தன்மைப் பெயரும் முன்னிலைப் பெயரும் ஒருமை பன்மை என்னும் எண்களை மட்டும் காட்டும். படர்க்கைப் பெயர் திணை பால் எண் அனைத்தையும் காட்டும்.

ந. சூ. தன்மை முன்னிலை படர்க்கை மூவிடனே. (ரு)

ந. சூ. தன்மை யான்நான் யாம்நாம்; முன்னிலை
எல்லீர் நீயிர், நீவிர், நீர், நீ;
அல்லன படர்க்கை; எல்லாம் எனல்பொது. (சு)

பயிற்சி

அடியிற்காணும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களின் திணை, பால், எண், இடம் இவற்றைக் குறிக்க.

1. உன் ஊர் எது?
2. 'காகம் உறவு கலந்துண்ணும்'.
3. கிளி சொன்னதைச் சொல்லும்.
4. நாங்கள் நல்ல ஆசிரியரிடம் பயின்றோம்.
5. 'தாம் தாம் முன் செய்தவினை தாமே அனுபவிப்பர்'.
6. ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
7. நான் உனக்கு அவன் வீட்டைக் காட்டுகிறேன்.
8. அர்ச்சுனன் காண்டவ வனத்தைத் தீக் கடவுளுக்கு இரையாகக் கொடுத்தான்.
9. மலைப் பழம் ஒரு தனிச் சுவை வாய்ந்தது.
10. திருமால் அலைகடலிற் றுயில்வோன்.

வேற்றுமை

51. வேற்றுமை என்பது வேறுபாடு; அஃதாவது பெயர்ச்சொல் தனக்குரிய பொருளோடு கருத்தாப் பொருள் செயப்படு பொருள் கருவிப்பொருள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு வேறுபடுத்துவது.

வேலன், விறகு, கோடரி இம் மூன்று சொற்களும், தனித்தனியாக நிற்கும்போது, அவைகட்கு இயல்பாக வுள்ள மூன்று பொருள்களை மட்டும் குறிக்கும். ஆயின், அவை 'வேலன் விறகைக் கோடரியாற் பிளந்தான்' என ஒரு வாக்கியத்தில் அமையும் பொழுது, 'வேலன்' பிளத்த லாகிய தொழிலுக்குக் கருத்தாவாகவும், 'விறகு' பிளக் கப்படு (செயப்படு) பொருளாகவும், 'கோடரி' பிளக்கும் கருவியாகவும் ஆகும். ஆகவே, வேலன், விறகு, கோடரி இம்மூன்றும், தமக்குரிய பொருளோடு, முறையே, கருத் தாப் பொருளும், செயப்படு பொருளும், கருவிப் பொரு ளும் என வெவ்வேறு பொருளுடையனவாயின. இவை கள் முறையே முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை என்று கூறப்படும்.

52. வேற்றுமை எட்டு வகைப்படும். அவை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற் றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற் றுமை என்பன.

வேற்றுமையை அறிவிக்குங் குறியாக வரும் இடைச் சொல் 'வேற்றுமை உருபு' எனப்படும். வேற்றுமை யுரு புகள் தம்மை ஏற்கும் பெயர்ச் சொல்லின் இறுதியில் விரிந்தேனும் மறைந்தேனும் நிற்கும்.

53. **முதல் வேற்றுமை :** முதல் வேற்றுமையாவது பெயர்ப் பொருளைக் கருத்தாப் பொருளாக வேறுபடுத்து வது.

முதல் வேற்றுமைக்குத் தனியாக உருபில்லை; பெயர்ச் சொல் யாதொரு மாறுபாடுமின்றி ஒரு வாக்கியத் தின் **எழுவாயாக வரும்பொழுது முதல் வேற்றுமை** யாகும். அதற்கு வினையும் பெயரும் வினவும் பயனிலையாக வரும்.

எழுவாய், கருத்தா, வினைமுதல், செய்பவன் என்பன ஒரு பொருட் சொற்கள்.

(உ - ம்) முருகன் வந்தான்—வினைப் பயனிலை.
முருகன் அவன்—பெயர்ப் பயனிலை.
முருகன் யார்? —வினாப் பயனிலை.

குறிப்பு :—முதல்வேற்றுமை பெயர்வேற்றுமை எனவும் எழுவாய் வேற்றுமை எனவும் கருத்தாவேற்றுமை எனவும் கூறப்படும். சில இடங்களில் முதல் வேற்றுமைக்கு என்பவன், என்பவள், என்பவர், என்பது, என்பன, ஆனவன், ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை முதலியன ஐம்பாலிலும் சொல்லுருபாக வரும். (உ-ம்.) இராமன் என்பவன் தசரதர் குமாரன்; சீதை என்பவள் இராமன் மனைவி.

சொல்லுருபென்பது உருபாக வரும் ஒரு சொல்.

54. **இரண்டாம் வேற்றுமை :** இரண்டாம் வேற்றுமையாவது பெயர்ப் பொருளைச் செயப்படு பொருளாக வேறுபடுத்துவது. செயப்படுபொருள்—தொழிற்படு பொருள்.

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பது.

ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையாகவே இருக்கும்.

(உ - ம்.) பாலைப் பருகினான்.
பானையை உடைத்தான்.
ஊரை அடைந்தான்.
சேலையை நெய்தான்.

55. **மூன்றாம் வேற்றுமை :** மூன்றாம் வேற்றுமையாவது பெயர்ப்பொருளைக் கருவிப் பொருளாகவும் கருத்தாப் பொருளாகவும் உடனிகழ்ச்சிப் பொருளாகவும் வேறுபடுத்துவது.

மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, என்பன. கொண்டு, உடன் என்பவையும் மூன்றாம் வேற்றுமையின் சொல்லுருபாக வரும்.

மேற்கூறிய உருபுகளுள் ஆல், ஆன், கொண்டு என்பன கருவிப்பொருள் கருத்தாப் பொருள்களிலும் ஒடு, ஓடு, உடன் என்பன உடனிகழ்ச்சிப் பொருளிலும் வரும்.

(உ - ம்.)

வாளான் மரத்தை அறுத்தான்— கருவிப்பொருள்.
கொற்றனுல் கோவில் கட்டப்பட்டது—கருதாப் பொருள்.
ஆசிரியரோடு மாணவர் வந்தனர் } உடனிகழ்ச்சிப் பொருள்
தந்தையுடன் மகன் வந்தான்

'ஆசிரியரோடு மாணவர் வந்தனர்' என்பதற்கு 'ஆசிரியரும் மாணவரும் வந்தனர்' என்பது பொருள். மாணவர் தொழிலாகிய வருதலைத் தம்மிடத்தும் உடன்நிகழக் கொண்டவர் ஆசிரியராதலின் 'ஆசிரியரோடு' என்பது உடனிகழ்ச்சிப் பொருளதாயிற்று. 'தந்தையுடன்' என்பதற்கும் இங்ஙனமே கொள்க.

56. **நான்காம் வேற்றுமை :** நான்காம் வேற்றுமையாவது பெயர்ப்பொருளை ஏற்றுக்கோடற் பொருளாக வேறுபடுத்துவது. ஏற்றுக் கோடல்—ஏற்றுக்கொள்ளுதல்.

நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பது; **பொருட்டு, நிமித்தம்** என்பவையும் 'கு' வ்வுருபின் மேல் 'ஆக' என்பதும் நான்காம் வேற்றுமையின் சொல்லுருபாக வரும்.

(உ - ம்.) வறியோர்க்குச் சோறளித்தான்.
வேலையின் நிமித்தம் இலங்கை சென்றான்.
கூலியின் பொருட்டு வேலை செய்தான்.
படிப்புக்காக பள்ளி சென்றான்.

57. **ஐந்தாம் வேற்றுமை:** ஐந்தாம் வேற்றுமையாவது பெயர்ப்பொருளை விகற்பித்தற் பொருளாக வேறுபடுத்துவது. விகற்பித்தல்—இதனின் இது இத்தன்மையது எனக் கூறல்.

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் **இன், இல்** என்பன; இன் இல் உருபுகளின் மேல் **நின்று, இருந்து** என்பன ஐந்தன் சொல்லுருபாக வரும்.

(உ - ம்.) கந்தனின் மூத்தோன் கணேசன்.
கல்வியிற் பெரியார் கம்பர்.
காட்டினின்று வரும் ஆறு காட்டாறு.
வீட்டிலிருந்து வருகின்றேன்.

58. **ஆறும் வேற்றுமை :** ஆறும் வேற்றுமையாவது பெயர்ப்பொருளைக் கிழமைப் பொருளாக வேறுபடுத்துவது கிழமை—உரிமை, சம்பந்தம்.

ஆறும் வேற்றுமையின் உருபுகள் **அது, ஆது, அ** என்பன. **உடைய** என்பது ஆறன் சொல்லுருபாக வரும்.

(உ - ம்.) கொற்றனது குடை.
எனது வீடு.
உன கைகள்.
கந்தனுடைய மயில்.

'எனது வீடு' என்பதற்கு 'என்னுடைய வீடு' எனவும் 'உன கைகள்' என்பதற்கு 'உனது கைகள்' எனவும் பொருள்.

59. **ஏழாம் வேற்றுமை :** ஏழாம் வேற்றுமையாவது பெயர்ப்பொருளை இடப்பொருளாக வேறுபடுத்துவது. ஏழாம் வேற்றுமையின் உருபுகள் **இல், இடம், கண், கால்** முதலிய பலவாகும்.

அவ் வுருபுகளைத் தெரிவிக்கும் சூத்திரம் வருமாறு:—

ந. சூ. கண்கால் கடைஇடை தலைவாய் திசைவயின்
முன்சார் வலம்இடம் மேல்கீழ் புடைமுதல்
பின்பாடு அளைதேம் உழைவழி உழிஉளி
உள்அகம் புறம்இல் இடப்பொரு ளுருபே.

பக்கல், பாங்கர், முகம், மாடு, இன் முதலியனவும் ஏழன் உருபுகளாக வரும்.

குறிப்பு:—கண் கால் முதலியன ஏழாம் வேற்றுமையில் இடப்பொருளைக் குறிக்கும்போது மட்டும் அவைகளை ஏழனுருபுகளாகக் கொள்ளுதல் வேண்டும்.

(உ - ம்) ஆற்றில் வெள்ளம் பெருகிற்று.
முருகனிடம் வேல் உண்டு.
என்னிடத்தில் பசு இருந்தது.
சபையின்கண் பேசப் பழகவேண்டும்.

'என்னிடத்தில்' என்பதில் 'இடம்' என்னும் உருபோடு 'இல்' உருபும் வந்தது; 'அத்து' என்னும் சாரியையும் தோன்றியது. 'சபையின்கண்' என்பதில் 'இன்' சாரியை.

60. **எட்டாம் வேற்றுமை :** எட்டாம் வேற்றுமையாவது பெயர்ப்பொருளை விளிப் பொருளாக வேறுபடுத்துவது. விளித்தல் - அழைத்தல்.

முதல் வேற்றுமைபோலவே எட்டாம் வேற்றுமையும் வேறு உருபைப் பெறாது. ஆயினும் விளி ஏற்கும் பெயரின் ஈறு திரிதல், குறைதல், மிகுதல், இயல்பாதல், ஈற்றயல் திரிதல் முதலியவை எட்டன் உருபுகளாகக் கொள்ளப் படும். எனவே, முதல் வேற்றுமையின் விகாரமே எட்டாம் வேற்றுமை என்க.

எட்டாம் வேற்றுமை விளித்தற் பொருளில் வருதலால் விளிவேற்றுமை எனவும் பெயர்பெறும்.

(உ-ம்.)

அம்மா, சோறிடுக குழந்தாய், இங்கு வா	ஈறு திரிதல்.
அன்ப, இது கேள் நண்ப, வீடு செல்	ஈறு குன்றல்
தாயே, நீர் தருக மகனே, பள்ளி செல்	ஈறு மிகுதல்.
தம்பி, இங்கு நில் தங்கை, இனிப் பாடு	இயல்பு
பிள்ளைகாள், நன்கு படியுங்கள் அன்பர்காள், இங்கு வாருங்கள்	ஈற்றயல் திரிதல்.
அப்பா, நானும் வருவேன் ஐயே, மெத்தக்கடினம்	ஈறு கெட்டு அயல் திரிதல்.

குறிப்பு :— இயல்பாக நிற்கும்விளி இயல்புவிளி எனக் கூறப்படும். முதல்வேற்றுமைக்கும் இயல்பாக வரும் எட்டாம்வேற்றுமைக்கும் சொல்லால் வேற்றுமையின்றேனும் பொருளால் வேற்றுமை உண்டு.

61. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உள்ள ஆறு வேற்றுமைகளிலும் உருபு விரிந்து

நிற்றலே யன்றித் தொக்கு நிற்றலும் உண்டு. [விரிந்து நிற்றல் - வெளிப்பட்டு நிற்றல். தொக்கு நிற்றல் - மறைந்து நிற்றல்.] உருபு தொக்கு நிற்பது **வேற்றுமைத் தொகை** எனவும் விரிந்து நிற்பது **வேற்றுமை விரி** எனவுங் கூறப்படும்.

உ - ம்:	தொகை	விரி
இரண்டாம் வேற்றுமை	பால் பருகினான் ;	பாலைப்பருகினான்
மூன்றாம் வேற்றுமை	தலை வணங்கினாள்;	தலையால்வணங்கினாள்
நான்காம் வேற்றுமை	வீடு சென்றான்;	வீட்டுக்குச் சென்றான்.
ஐந்தாம் வேற்றுமை	காட்டாறு;	காட்டினின்று (வரும்) ஆறு.
ஆறாம் வேற்றுமை	கண்ணன் மாடு;	கண்ணனது மாடு.
ஏழாம் வேற்றுமை	மலைப்பழம்;	மலையில் (விளையும்) பழம்.

கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்கள் எந்த வேற்றுமை? தொகையாயிருப்பின் அதனையும் குறிப்பிடுக.

1. பசு புல் மேய்கிறது.
2. பூனை பாலைக் குடித்தது.
3. இயல்வது கரவேல்.
4. நாயைத் தடிகொண்டடித்தான்.
5. தச்சனால் நாற்காலி செய்யப்பட்டது.
6. முருகனுக்கு மூக்கு நீளமானது.
7. இராமன் காடு சென்றான்.
8. அணில் மரத்தில் ஏறுகிறது.
9. உனது தந்தையின் பெயர் என்ன?
10. காவிரி குடகு மலையினின்று வருகின்றது.
11. தமிழ் நமது தாய்மொழி; அதனால், பிள்ளைகாள், நாம் அதனைப் போற்றிப் பயிலவேண்டும்.
12. அன்னாய், எனக்குத் தின்பண்டம் வேண்டும்.
13. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்,
14. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல தன்றே மறப்பது நன்று.
15. கல்லா ரிணக்கம் நன்மை தரும்.

வினைச்சொல்

62. வினைச்சொல் **வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம்** என மூவகைப்படும். இவற்றுள், வினைமுற்று முற்று வினை என்றும் வினையெச்சமும் பெயரெச்சமும் எச்சவினை என்றும் கூறப்படும்.

63. **முற்றுவினையாவது** பொருள் முற்றி (முடிந்து) நிற்கும் வினைச்சொல்.

(உ - ம்.) கண்ணன் வந்தான் ; வருகின்றான் ; வருவான்.

இவ் வினைமுற்றுக்கள் தம் பொருளை முடிக்க வேறு சொற்களை வேண்டாது தாமே முடிந்து நிற்றல் காண்க.

64. **எச்சவினையாவது** குறைச்சொல்லாய்த் தன் பொருள் முடிவதற்கு வேறொரு சொல்லை வேண்டி நிற்கும் வினைச்சொல்.

(உ - ம்.) வந்து (நின்றான்) ; உழுகிற (மாடு).

வந்து, உழுகிற என்னும் சொற்கள் எச்சமாய்ப் பொருள் முடிவதற்கு வேறு சொல்லை வேண்டி நிற்றல் காண்க.

65. வினைச்சொல்லில் உள்ள முக்கியமான உறுப்புக்கள் **பகுதி, விகுதி இடைநிலை** என்பன.

பகுதி என்பது ஒரு வினைச்சொல்லில் **முதலில் நிற்கும்** உறுப்பு. ஆதலால், இது **முதனிலை** என்றும் கூறப்படும். பகுதியாற் செயல் இன்னது என அறியலாம்.

விகுதி என்பது ஒரு வினைச்சொல்லில் **இறுதியில் நிற்கும்** உறுப்பு. ஆதலால், இது **இறுதி நிலை** என்றும் கூறப்படும். முற்றுவினையில் விகுதியால் திணை பால் எண் இடம் இவற்றை அறியலாம்.

இடைநிலை என்பது ஒரு வினைச்சொல்லில் **இடையில் நிற்கும்** உறுப்பு. இடைநிலையால் காலத்தை அறியலாம். (உ - ம்) உண்டான் : உண் + ட் + ஆன் — இதில், உண் - பகுதி ; ஆன் - விகுதி ; ட் - இடைநிலை.

பாடுகிருள் : பாடு + கிறு + ஆள் — இதில், பாடு - பகுதி ; ஆள் - விகுதி ; கிறு - இடைநிலை.

உறங்குவார் : உறங்கு + வ் + ஆர் — இதில், உறங்கு - பகுதி ; ஆர் - விகுதி ; வ் - இடைநிலை.

வினைமுற்று

பகுதி

66. வினைப்பகுதி விகுதி பெருத ஏவலைப் போல நின்று செயல் இன்னது என்பதை உணர்த்தும்.

(உ - ம்) உண்டான் ; படிக்கிருன் ; படுப்பான் — இவற்றுள், உண், படி, படு என்னும் பகுதிகள் முறையே உண்ணுதல், படித்தல், படுத்தல் ஆகிய செயல்களை உணர்த்துதல் காண்க.

விகுதி

67. வினைமுற்று விகுதி திணை பால் எண் இடம் இவற்றை உணர்த்தும். வினைமுற்று விகுதிகளாவன அன், ஆன் முதலியவை.

68. அன், ஆன் என்பன உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கையில் வரும்.

(உ - ம்) கண்டனன் ; செல்கின்ருன் — அன், ஆன் ; விகுதிகள்.

69. அள், ஆள் என்பன உயர்திணைப் பெண்பால் ஒருமைப் படர்க்கையில் வரும்.

(உ - ம்) உண்டனள் ; உறங்குவாள் — அள், ஆள் : விகுதிகள்.

70. அர், ஆர், ப, கள் என்பன உயர்திணைப் பலர்பால் பன்மைப் படர்க்கையில் வரும்.

(உ - ம்) சென்றனர் ; செல்கின்ருர் ; செல்ப ; செல்வார்கள் — அர், ஆர், ப: விகுதிகள் ; கள் - விகுதிமேல் விகுதி.

71. து, று, டு என்பன அஃறிணை ஒன்றன்பால் ஒருமைப் படர்க்கையில் வரும். இவற்றுள் 'டு' என்பது குறிப்பு வினைமுற்று விகுதியாகும்.

(உ - ம்) குரைத்தது ; ஓடிற்று ; உண்டு—து, று, டு: விகுதிகள்.

72. அ, ஆ என்பன அஃறிணைப் பலவின்பால் பன்மைப் படர்க்கையில் வரும். இவற்றுள், 'ஆ' என்பது எதிர்மறையில் மாத்திரம் வரும்.

(உ . ம்) சென்றன ; செல்லா—அ, ஆ : விகுதிகள்.

73. ஐ, ஆய், இ என்பன இருதிணையிலும் முன்னிலை ஒருமையில் வரும்.

(உ . ம்) நடந்தனை ; வருகின்றாய் ; கூறுதி—ஐ, ஆய், இ: விகுதிகள்.

குறிப்பு :—வா ; நில் ; போ எனப் பகுதிமாத்திரமாய் நின்று ஏவற் பொருளில் வரும் வினைமுற்றுக்களெல்லாம் முன்னிலை யொருமை வினை முற்றுக்களே. இவைகட்கு விகுதி வேண்டுவதில்லை.

74. இர், ஈர், கள், மின் என்பன இருதிணையிலும் முன்னிலைப் பன்மையில் வரும். இவற்றுள் 'மின்' என்பது ஏவலிலும் 'கள்' என்பது விகுதிமேல் விகுதியாகவும் வருவன. 'உம்' என்பது சிறுபான்மை முன்னிலைப் பன்மை விகுதியாக வரும்.

(உ - ம்) நடந்தனிர் ; வந்தீர்—இர், ஈர்—விகுதிகள்.
வந்தீர்கள் ; சென்றீர்கள் ; — கள் : விகுதிமேல் விகுதி.
வம்மின் ; காண்மின் ; — மின் : ஏவற்பன்மை விகுதி.
வாரும் ; கேளும் ;—உம் : ஏவற்பன்மை விகுதி.
வாருங்கள் ; கேளுங்கள் :-கள் : விகுதிமேல் விகுதி.

75. அல், அன், என், ஏன் முதலியன இருதிணையிலும் தன்மை யொருமையில் வரும்.

(உ - ம்) செல்வல் ; கூறுவன் ; கண்டனென் ; பேசினேன் — அல், அன், என், ஏன் : விகுதிகள்.

குறிப்பு:— 'அன்' விகுதி உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கையிலும் வரும். உதாரணம் முன்னர்க் காட்டப் பெற்றுள்ளது.

76. அம், ஆம், எம், ஏம், ஓம் முதலியன இருதிணையிலும் தன்மைப் பன்மையில் வரும்.

(உ - ம்) எழுதினம் ; கூறினும் ; உண்டனெம் ; சென்றேம் ; பேசினோம்— அம், ஆம், எம், ஏம், ஓம் : விகுதிகள்.

குறிப்பு :—முன்னிலையும் தன்மையும் இருதிணைக்கும் பொதுவாகலின் அவற்றில் திணையும் பாலும் விளங்கித் தோன்று ; ஒருமை பன்மை என்னும் எண் மாத்திரம் விளக்கமாகத் தோன்றும்.

இடைநிலை

77. வினைச்சொல்லில் இடைநிலை காலத்தை உணர்த்தும்.

காலம் : இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூவகைப்படும்.

இறந்தகாலம் செயல் முன்பே நடைபெற்றது என்பதைத் தெரிவிக்கும்.

நிகழ்காலம் செயல் இப்பொழுது நடைபெறுகிறது என்பதைத் தெரிவிக்கும்.

எதிர்காலம் செயல் இனி நடைபெறும் என்பதைத் தெரிவிக்கும்.

இறந்தகால இடைநிலை

78. த், ட், ற், இன் என்னும் நான்கும் ஐந்து பாலிலும் மூவிடத்திலும் இறந்தகாலத்தைக் காட்டும் இடைநிலைகளாம்.

(உ - ம்) தின்றான்; தின்றாள்; தின்றார்; தின்றது; தின்றன;—ற் இடைநிலை படர்க்கையில் ஐந்து பாலிலும் வந்தது.

தின்றாய்; தின்றீர்—ற் இடைநிலை முன்னிலையில் வந்தது.

தின்றேன்; தின்றோம்—ற் இடைநிலை தன்மையில் வந்தது.

படித்தான்; உண்டான்; உறங்கினான் — த், ட், இன் என்னும் இடைநிலைகள் படர்க்கை ஆண்பாலில் வந்தன. மற்றைய பால் இடங்களிலும் இங்ஙனமே ஒட்டுக.

குறிப்பு:—இன் இடைநிலை 'சொல்லியது' எனக் கடை குறைந்தும் 'சொன்னது' என முதல் குறைந்தும் வரும்.

ந. சூ. தடற வொற் றின்னே ஐம்பால் மூவிடத்
இறந்த காலம் தருந்தொழி லிடைநிலை. (அ)

நிகழ்கால இடைநிலை

79. ஆநின்று, கின்று, கிறு என்னும் மூன்றும் ஐம்பாலிலும் மூவிடத்திலும் நிகழ்காலத்தைக் காட்டும் இடைநிலைகளாம்.

(உ - ம்) வாராநின்றான்; வருகின்றான்; வருகிறான் — ஆநின்று. கின்று, கிறு, என்னும் இடைநிலைகள் படர்க்கையில் ஆண்பாலில் வந்தன. மற்றைய பால் இடங்களிலும் இங்ஙனமே ஒட்டுக.

குறிப்பு:—'வாராநின்றான்' என்பதற்கு வருகின்றான் என்பதே பொருள். 'ஆநின்று' என்னும் இவ்விடைநிலை செய்யுளில் சிறுபான்மை வரும்; உரைநடையில் பெரும்பாலும் வருவதில்லை.

ந. சூ. ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழு தறைவினை இடைநிலை. (கூ)

எதிர்கால இடைநிலை

80. ப், வ் என்னும் இடைநிலைகள் ஐம்பால் மூவிடங்களில் எதிர்காலத்தைக் காட்டும்.

(உ - ம்) காண்பான்; போவான்—ப், வ், என்னும் இடைநிலைகள் படர்க்கை ஆண்பாலில் வந்தன. மற்றைய பால் இடங்களிலும் இங்ஙனமே ஒட்டுக.

ந. சூ. பவ்வ மூவிடத் தைம்பால் எதிர்பொழு
திசைவினை இடைநிலை யாம்; இவை சிலவில. (ய)

குறிப்பு :—'மேலே கூறப்பட்ட முக்கால இடைநிலைகளையும் சில வினைச்சொற்கள் 'பெறு' என்பது எதிர்கால விடைநிலைச் சூத்திரத்தில் "இவை சில இல" என்பதனால் குறிக்கப்பட்டது. அத்தகைய வினைச் சொற்களில் விகுதியாவது பகுதியாவது பகுதியின் விகாரமாவது வேறு இடைநிலையாவது காலங்காட்டும்.

(உ-ம்) மொழிப (மொழிந்தார்); மொழிப (மொழிவார்)—ப விகுதி இறந்த காலமும் எதிர் காலமும் காட்டியது.

கூறும் (கூறுகிறான்); கூறும் (கூறுவான்)—உம் விகுதி நிகழ் காலமும் எதிர்காலமும் காட்டியது.

வா ; போ — பகுதி ஏவற்பொருளில் எதிர்காலங் காட்டிற்று.

புக்கான் ; தொட்டான்—புகு, தொடு என்னும் பகுதிகள் விகாரப்பட்டு (ஒற்று இரட்டித்து) இறந்தகாலங் காட்டின.

போயது — ய் என்னும் இடைநிலை இறந்தகாலங் காட்டியது.

செய்கேன் — க் என்னும் இடைநிலை எதிர்காலங் காட்டியது.

வினையெச்சம்

81. வினையெச்சம் என்பது பால் காட்டும் முற்று விகுதி பெறாத குறைவினைச் சொல்லாய் வினையைக் கொண்டு முடிவது. [எச்சம்—எஞ்சி நிற்பது ; அஃதாவது முடிக்குஞ் சொல். வினையெச்சம்—வினையாகிய எச்சத்தை யுடையது.]

இவ் வினையெச்சம் செயலும் காலமும் விளங்கப் பெற்றுப் பால் காட்டும் விகுதியும் முடிக்குஞ் சொல்லாகிய வினையும் குறைந்து நிற்கும்.

வினையெச்ச வாய்பாடுகள் பலவாயினும் இறந்தகாலத் துக்குச் 'செய்து' என்பதும் நிகழ்காலத்துக்குச் 'செய' என்பதும் எதிர்காலத்துக்குச் 'செயின்' என்பதும் சிறப் புடைய வாய்பாடுகளாகக் கொள்ளப்படும். வாய்பாடு— சொன்முறை.

வினையெச்ச விகுதிகளாவன உ, இ, ய, அ, இன், ஆல், முதலியன.

உதாரணம்

வந்து (நின்றான்)	—உ விகுதி	இவை 'செய்து' என்னும் வாய்ப்பாட்டு இறந்த கால வினையெச்சம்.
ஓடி (நின்றான்)	—இ விகுதி	
போய் (நின்றான்)	—ய் விகுதி	
அழைக்க (வந்தான்)	—அ விகுதி	இவை 'செய' என்னும் வாய்ப்பாட்டு நிகழ் கால வினையெச்சம்.
படிக்கச் (செல்கிறான்)	—அ விகுதி	
உண்ண (வருவான்)	—அ விகுதி	
உண்ணின் (பசிதீரும்)	—இன் விகுதி	இவை 'செயின்' என்னும் வாய்ப்பாட்டு எதிர் கால வினையெச்சம்.
உண்டால் ,,	—ஆல் விகுதி	
உண்டக்கால் ,,	—கால் விகுதி	

ந. சூ. தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
ஒழிய நிற்பது வினையெச் சம்மே. (௬௧)

குறிப்பு:—ஒரு வினையெச்சமானது வினைமுற்று, மற்றொரு வினையெச்சம், பெயரெச்சம், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகிய ஐந்து வகை வினைச்சொற்களைக் கொண்டு முடியும்.

(உ - ம்) கண்டு பேசினன் —வினைமுற்றைக் கொண்டது.
கண்டு பேசி —வினையெச்சத்தைக் கொண்டது.
கண்டு பேசின —பெயரெச்சத்தைக் கொண்டது.
கண்டு பேசுதல் —தொழிற்பெயரைக் கொண்டது.
கண்டு பேசினவன்—வினையாலணையும் பெயரைக்கொண்டது.

பெயரெச்சம்

82. பெயரெச்சம் என்பது பால் காட்டும் முற்று விகுதி பெறாத குறைவினைச் சொல்லாய்ப் பெயரைக் கொண்டு முடிவது. [பெயரெச்சம்—பெயராகிய எச்சத்தை யுடையது.]

இஃது செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாட்டில் காலமும் செயலும் தோன்றப் பெற்றுப் பால் காட்டும் விகுதியும் முடிக்குஞ் சொல்லாகிய செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய அறுவகைப் பெயரும் குறைந்து நிற்கும்.

பெயரெச்ச வாய்பாடுகள் செய்த, செய்கின்ற, செய்யும் என்பன: செய்த என்பது இறந்தகால வாய்பாடு; செய்கின்ற என்பது நிகழ்கால வாய்பாடு; செய்யும் என்பது எதிர்கால வாய்பாடு.

பெயரெச்ச விகுதிகள் அ, உம் என்பவை.

(உ-ம்)	உண்ட (வேலன்) உண்கின்ற (வேலன்) உண்ணும் (வேலன்)	}	செய்பவனைக் கொண்டு முடிந்தது.
	உண்ட (கலம்) உண்கின்ற (கலம்) உண்ணும் (கலம்)	}	கருவியைக் கொண்டு முடிந்தது.
	உண்ட (வீடு) உண்கின்ற (வீடு) உண்ணும் (வீடு)	}	நிலத்தைக் கொண்டு முடிந்தது.
	உண்ட (தொழில்) உண்கிற (தொழில்) உண்ணும் (தொழில்)	}	செயலைக் கொண்டு முடிந்தது.
	உண்ட (வேளை) உண்கிற (வேளை) உண்ணும் (வேளை)	}	காலத்தைக் கொண்டு முடிந்தது.
	உண்ட (உணவு) உண்கிற (உணவு) உண்ணும் (உணவு)	}	செய்பொருளைக் கொண்டு முடிந்தது.

உண்ட — 'செய்த' என்னும் வாய்பாடு; உண்கிற — 'செய்கின்ற' என்னும் வாய்பாடு; உண்ணும் — 'செய்யும்' என்னும் வாய்பாடு. செய்த, செய்கின்ற என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சங்களில் இடைநிலைகள் முறையே இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் காட்டும்; 'அ' என்பது விகுதி. செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சத்தில் 'உம்' என்னும் விகுதியே எதிர்காலத்தைக் காட்டும்.

ந. சூ. செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டில்
காலமுஞ் செயலுந் தோன்றிப் பாலொடு
செய்வ தாதி அறுபொருட் பெயரும்
எஞ்ச நிற்பது பெயரெச் சம்மே. (கஉ)

83. வினைச்சொற்களில் செயப்படுபொருள் குன்றா வினை எனவும் செயப்படுபொருள் குன்றிய வினை எனவும் இரு பெரும் பிரிவு உண்டு.

செயப்படுபொருள் குன்றாவினை

84. செயப்படுபொருள் குன்றாவினையாவது செயப்படுபொருள் உள்ள வினை. [குன்றா - குறையாத, உள்ள.]

(உ - ம்) 1. திருவள்ளுவர் திருக்குறள் இயற்றினர்.
2. முருகன் மாமரத்தைப் பிளந்தான்.
3. மாடு கழுநீர் குடிக்கிறது.
4. அணில் பழம் தின்கிறது.
5. கழுதை பொதி சுமக்கும்.

செயப்படுபொருள் குன்றியவினை

85. செயப்படுபொருள் குன்றியவினையாவது செயப்படுபொருள் இல்லாத வினை. [குன்றிய - குறைந்த, இல்லாத.]

(உ - ம்) 1. குதிரை விரைந்து ஓடிற்று.
2. கண்ணன் பள்ளி சென்றான்.
3. பருந்து வானிற் பறக்கிறது.
4. கன்று துள்ளிக் குதிக்கிறது.
5 மணியன் நாளைத் தன் ஊர் செல்வான்.

86. எல்லா வினைச் சொற்களும் உடன்பாட்டு வினை எதிர்மறை வினை என இருவகைப்படும்.

உடன்பாட்டு வினை

87. உடன்பாட்டு வினையாவது தொழில் நிகழ்ச்சி உள்ளமையை உணர்த்தும் வினை. உடன்பாட்டுவினை விதி வினை என்றும் கூறப்படும்.

(உ - ம்)

(முருகன்) வந்தான் (வள்ளி) பாடினள் (குமரர்) கூடினர்	உடன்பாட்டு வினைமுற்றுக்கள்.
(கந்தன்) குளிக்கச் (சென்றான்) (கழுதை) புரண்டு (எழுந்தது) (நீ) படித்தால் (தேறுவாய்)	உடன்பாட்டு வினையெச்சங்கள்.
உழுத (மாடு) ஓடுகிற (நீர்) இருக்கும் (இடம்)	உடன்பாட்டுப் பெயரெச்சங்கள்.

எதிர்மறை வினை

88. எதிர்மறை வினையாவது தொழில் நிகழ்ச்சி இல்லாமையை உணர்த்தும் வினை. எதிர்மறைவினை மறை வினை என்றும் கூறப்படும். எதிர்மறையைக் காட்டும் இடைநிலைகள் இல், அல், ஆ என்பன. உடன்பாட்டு வினையோடு 'இல்லை' என்பதைச் சேர்த்தும் எதிர்மறை ஆக்கலாம்.

(உ - ம்)

(முருகன்) வந்தானிலன் (வேலன்) போகின்றனலன் (வள்ளி) பாடினாளில்லை (குமரர்) கூடவில்லை	எதிர்மறை வினைமுற்றுக்கள்.
(கந்தன்) குளிக்காது (வந்தான்) (கண்ணன்) படியாது (நின்றான்) (சீதை) பேசாமல் (சென்றாள்)	எதிர்மறை வினையெச்சங்கள்.
உழாத (நிலம்) கழுவாத (பாண்டம்) ஓயாத (மழை)	எதிர்மறைப் பெயரெச்சங்கள்.

89. எதிர்மறை வினையெச்சமும் பெயரெச்சமும் ஈறு கெட்டு வந்தால் முறையே ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம் எனவும் ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனவும் கூறப்படும்.

(உ-ம்) உண்ணு (சென்றான்) } ஈறுகெட்ட எதிர்மறை
படியா (வந்தான்) } வினையெச்சங்கள்.

உண்ணாது, படியாமல் என்பன ஈறுகெட்டு வந்தன.

ஓடாக் (குதிரை) } ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்
தீராக் கோகம்) } சங்கள்.

ஓடாத, தீராத என்பன ஈறுகெட்டு வந்தன.

பயிற்சி

I. 1. வினைமுற்று என்றால் என்ன? உதாரணம் காட்டுக.

2. பகுதி, விகுதி, இடைநிலை இவற்றை உதாரணம் காட்டி விளக்குக.

3. இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் இவற்றைக் காட்டும் இடைநிலைகள் யாவை?

4. ப, உம் இவ் வினைமுற்று விகுதிகள் என்னென்ன காலத்தைக் காட்டும்? உதாரணம் வேண்டும்.

5. விடு, புகு, அறு இப் பகுதிகளிலிருந்து உண்டாகும் இறந்தகால வினைமுற்றுக்கு மும்மூன்று உதாரணம் காட்டுக.

6. காண், உண், நட, படி இப்பகுதிகளிலிருந்து முக்காலத்திலும் ஐம்பால் மூவிடங்களில் தோன்றக் கூடிய வினைமுற்றுக்களுக்கு ஒவ்வொரு உதாரணம் காட்டுக.

II. 1. எச்சவினை என்றால் என்ன? உதாரணம் காட்டுக.

2. வினையெச்சம், பெயரெச்சம் – பெயர்க்காரணத்தை விளக்குக.

3. வினையெச்ச விகுதிகள் பெயரெச்ச விகுதிகள் இவற்றைக் குறிக்க.

4. வினையெச்சத்தின் முக்கியமான வாய்பாடுகள் யாவை? அவை யென்னென்ன காலத்துக் குரியவை?

5. பெயரெச்ச வாய்ப்பாடுகளை அவைகளுக்குரிய காலத்துடன் கூறுக.

6. 'பெயரெச்சம் அறுவகைப் பெயர்களைக் கொண்டு முடியும்' — எங்ஙனம்?

7. வினையெச்சம் ஐவகை வினைச்சொற்களைக் கொண்டு முடிதற்கு இரண்டிரண்டு உதாரணம் தருக.

8. உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை இவற்றை விளக்குக.

9. ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சத்திற்கும் பெயரெச்சத்திற்கும் மும்மூன்று உதாரணம் காட்டுக.

III. கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள வினைமுற்று, வினையெச்சம் பெயரெச்சம் இவற்றைக் குறிக்க. பெயரெச்ச வினையெச்சங்களுக்கு முடிபும் கூறுக.

1. உழைத்துப் படித்த மாணவர் பரீட்சையில் தேறி உயர் நிலை அடைவர்.
2. சிறுகக் கட்டிப் பெருக வாழ்.
3. விடாது பெய்த மழையால் ஆற்றில் நீர் நிரம்பப் பெருகிற்று.
4. விடா முயற்சி வெற்றி தரும்.
5. பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
   சில சொல்லத் தேற்ரு தவர்.
6. வரப்புயர நீர் உயரும்.
7. ஆழ உழுத நிலம் அரிய பயனைத் தரும்.
8. கல்விக் கழகு கசடற மொழிதல்.
9. சேரிட மறிந்து சேர்.
10. துள்ளின மாடு பொதி சுமக்கும்.
11. அறஞ் செய விரும்பு.
12. ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
    நாழி முகவாது நானாழி.
13. ஏவா மக்கள் மூவா மருந்து.
14. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
    துண்ணின் றுடற்றும் பசி.
15. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
    சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

இடைச்சொல்

90. இடைச்சொல் என்பது தனித்து நடக்கும் ஆற்றலின்றிப் பெயரோடாயினும் வினையோடாயினும் வருஞ்சொல்.

இடைச்சொற்கள் பெயர்வினைகளின் பின்பேனும் முன்பேனும் ஓரிடத்தில் ஒன்றாகவாயினும் பலவாகவாயினும் வந்து அப்பெயர் வினைகளோடு ஒன்றுபட்டு நடக்கும் தன்மையனவாம். [இடைச்சொல்—பெயர் வினைகளினிடமாக வருஞ் சொல். இடை—இடம்.]

அவ்விடைச் சொற்கள் வேற்றுமையுருபுகளும், வினை விகுதி இடைநிலை முதலியவைகளும், சாரியைகளும், உவமவுருபுகளும், இசைநிறையும், அசைநிலையும், குறிப்பும், பிற வழியால் தத்தம் பொருளை உணர்த்துவனவும் என எண் வகைப்படும்.

இவற்றுள்,

வேற்றுமை யுருபுகளாவன முன்னே கூறப்பட்ட இரண்டாம் வேற்றுமை முதலியவற்றின் உருபுகள்.

விகுதிகளாவன சொல்லுறுப்பிற் கூறப்படும் அன், ஆன் முதலியன.

இடைநிலைகளாவன சொல்லுறுப்பிற் கூறப்படும் த், ட், ற், இன் முதலியன.

சாரியைகளாவன சொல்லுறுப்பிற் கூறப்படும் அன், ஆன், இன், அல், அற்று, அத்து முதலியன.

உவமவுருபுகளாவன போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன முதலியன.

குறிப்பாவன சோவென, கடகடனெ, திடுதிடெனு, திடுக்கென, பொள்ளென முதலியன.

இசை நிறையாவன இசைநிறைத்தற் பொருட்டு 'ஏ' என்றிங்ஙனம் தனித்தும் 'ஏ ஏ' என்றிங்ஙனம் அடுக்கியும் வருவன.

அசை நிலையாவன அசைத்து நிற்றலில் வரும் ஏ, ஓ, மாது, அன்று, அரோ, மியா, மோ, மதி முதலியன.

தத்தம் பொருளையுணர்த்துவன ஏ, ஓ, உம், மன், மற்று, கொல், என, என்று என்பனவும், அ இ உ என்னும் சுட்டும், எ யா ஆ ஓ ஏ என்னும் வினவும் இவை போல்வன பிறவும் ஆம்.

குறிப்பு :—பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் கூறும்பொழுது மேலே சொல்லப்பட்ட வேற்றுமையுருபுகளும் விகுதி இடைநிலை முதலியவைகளும் அப்பெயர் வினைகளோடு சேர்த்து அவற்றுள் அடங்கிவிடுமாகலின், உருபு முதலியவை தனித்தனியே கருதப்படும் போது மாத்திரம் இடைச்சொற்கள் எனப்படும்.

ந. சூ. வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பெனெண் பகுதியின் தனித்திய லின்றி
பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல். (கங)

உரிச்சொல்

91. உரிச்சொல் என்பது குணத்தை உணர்த்தும் பெயராகிச் செய்யுளில் வருவதற்கு உரிய சொல்.

உரிச்சொற்கள் பலவகைப் பண்புகளையும் உணர்த்துவனவாய், ஒரு குணத்தையுணர்த்தும் ஒரு சொல்லாகவும் ஒரு குணத்தையுணர்த்தும் பல சொல்லாகவும் பல குணத்தை யுணர்த்தும் ஒரு சொல்லாகவும், தனித்தியங்காது, பெயர் வினைகளைச் சார்ந்து வருதற்குரியனவாம்.

சாயல் என்பது 'மென்மை' என்னும் ஒரு குணத்தையுணர்த்தும் ஒரு உரிச்சொல்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன 'மிகுதல்' என்னும் ஒரு குணத்தையுணர்த்தும் பல உரிச்சொற்கள்.

கடி என்பது 'காவல்', 'கூர்மை', 'விரைவு', 'அச்சம்' முதலிய பல குணங்களையுணர்த்தும் ஒரு உரிச்சொல்.

ந. சூ. பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன உரிச்சொல். (கச)

பொது

தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடர்

92. சொற்கள் ஒன்றையொன்று தொடர்ந்து நின்றால் சொற்றொடர் ஆகும். அத்தொடர் தொகைநிலையாகவும் தொகாநிலையாகவும் அமையும். தொகைநிலையாக அமைவது தொகைநிலைத்தொடர் எனவும் தொகாநிலையாக அமைவது தொகாநிலைத்தொடர் எனவும் கூறப்படும். தொகைநிலைத்தொடரைத் **தொகை** எனவும் தொகாநிலைத்தொடரைத் **தொடர்** எனவும் சுருங்கக் கூறுதல் மரபு.

93. **தொகைநிலைத் தொடர்** என்பது வேற்றுமையுருபு, இடைநிலை, பண்புருபு, உவமவுருபு முதலியன நிலைமொழியில் தொக்கு நிற்க, அது வருமொழியோடு தொடர்தலாம். [நிலைமொழி - முன் நிற்கும் மொழி; வருமொழி - அதனோடு வந்து சேரும்மொழி.]

தொகைநிலைத்தொடர், வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை முதலியனவாகப் பலவகைப்படும்.

(உ - ம்)

1. **வேற்றுமைத் தொகை : பழம் தின் ; பால் பருகு—இவற்றில் 'ஐ' என்னும் வேற்றுமையுருபு தொக்கு நின்றது.**

2. **வினைத் தொகை : தோய் தயிர்; பெய் மழை—இவற்றில் காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் தொக்கு நின்றன.**

வினைத்தொகையில் நிலைமொழி வினைப்பகுதியாகவும் வருமொழி பெயர்ச்சொல்லாகவும் இருக்கும்.

3. **பண்புத் தொகை : வெண்ணிலா, செவ்வானம்—இவற்றில் 'ஆகிய' என்னும் பண்புருபு தொக்கு நின்றது.**

4. உவமைத்தொகை : மலர்க்கை ; மதிமுகம்—இவற்றில் 'போலும்' என்னும் உவமவுருபு தொக்கு நின்றது.

94. தொகாநிலைத் தொடர் என்பது வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், எழுவாய், விளி முதலியவை நிலைமொழியாக நிற்க, அவை வருமொழியோடு தொடர்தலாம்.

தொகாநிலைத்தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், எழுவாய்த் தொடர், விளித்தொடர் முதலியனவாகப் பலவகைப்படும்.
(உ - ம்)

1. வினைமுற்றுத் தொடர் : வந்தான் கண்ணன் ; பெய்தது மழை—வந்தான், பெய்தது : வினைமுற்று.

2. பெயரெச்சத் தொடர் : படித்த பாட்டு ; செய்த வேலை—படித்த, செய்த : பெயரெச்சம்.

3. வினையெச்சத் தொடர் : நின்று பேசினான்; தேடிப் பிடித்தான்— நின்று , தேடி : வினையெச்சம்.

4. எழுவாய்த் தொடர் : கண்ணன் வந்தான் ; மழை பெய்தது—கண்ணன், மழை : எழுவாய்.

5. விளித்தொடர் : கந்தா, வா ; கண்ணா, போ —கந்தா, கண்ணா : விளி.

குறிப்பு:—தொகை, தொடர் இவற்றைப் பெரும்பாலும் நிலைமொழி நோக்கியே அறிதல் வேண்டும்.

புணர்ச்சி

நிலைமொழி, வருமொழி

95. சொற்கள் ஒன்றோடொன்று சேரும் சேர்க்கை புணர்ச்சி என்று கூறப்படும். சொற்கள் புணரும்போது முன்னே நிற்கும் மொழி நிலைமொழி எனவும் அதனோடு வந்து சேரும் மொழி வருமொழி எனவும் வழங்கப்படும்.

(உ-ம்.) தேன் இனிது—இதில், முன்னிற்குஞ் சொல்லாகிய 'தேன்' என்பது நிலைமொழி; அதனோடு வந்து சேருஞ் சொல்லாகிய 'இனிது' என்பது வருமொழி.

வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி

96. புணர்ச்சி, தான் காட்டும் பொருளின் நிலைமை பற்றி வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இருவகைப்படும்.

இவ்விருவகைப் புணர்ச்சியும் வேற்றுமைப் **பொருளும்** அல்வழிப் **பொருளும்** பற்றியவையாதலின் **பொருட்புணர்ச்சி** எனக் கூறப்படும்.

97. **வேற்றுமைப் புணர்ச்சி**யாவது இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமைவரை உள்ள ஆறு வேற்றுமையின் உருபுகளும் விரிந்தேனும் மறைந்தேனும் நிலைமொழி ஈற்றில் நிற்க, அது வருமொழியோடு அவ் வேற்றுமை வழியே புணரும் புணர்ச்சியாம்.

தொகையாகவும் விரியாகவும் வரும் வேற்றுமைப் புணர்ச்சி ஆறு வகையாம். தொகையெல்லாம் தொகைநிலைத் தொடர்; விரியெல்லாம் தொகாநிலைத் தொடர்.

உ-ம்.	தொகை	விரி
1. இரண்டாம் வேற்றுமை	—பால் பருகு;	பாலைப் பருகு.
2. மூன்றாம் வேற்றுமை	—தலை வணங்கு;	தலையால் வணங்கு.
3. நான்காம் வேற்றுமை	—வீடு செல்;	வீட்டுக்குச் செல்.
4. ஐந்தாம் வேற்றுமை	—நகர் நீங்கு;	நகரினின்று நீங்கு.
5. ஆறாம் வேற்றுமை	—முருகன்வேல்;	முருகனது வேல்.
6. ஏழாம் வேற்றுமை	—அறைபுகுந்தான்;	அறையிற் புகுந்தான்.

குறிப்பு :— முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் முறையே பெயரும் பெயரின் விகாரமுமேயன்றி வேறுருபுகள் இல்லாமையால் அவ்விரு வேற்றுமைகளும் அல்வழியில் சேர்க்கப்படும்.

98. **அல்வழிப் புணர்ச்சியாவது** வேற்றுமையல்லாத வழியிற் சொற்கள் புணர்தலாம். **இதுவும் தொகைநிலைத்** தொடர்எனவும் தொகாநிலைத்தொடர் எனவும் இருவகைப் படும்.

தொகைநிலைத் தொடராவது வினைத்தொகை, பண்புத் தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன் மொழித்தொகை என்பவை, பெரும்பாலும் நிலைமொழி யாக நிற்க, அவற்ரேடு வருமொழி புணர்தல் ஆம். ஆகவே, **அல்வழித் தொகைநிலைகள் ஐந்தாகும்.**

தொகாநிலைத் தொடராவது எழுவாய், விளி, பெய ரெச்சம், வினையெச்சம், தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று, இடைச்சொல், உரிச்சொல் என்பவை நிலை மொழியாக நிற்க அவற்ரேடு வருமொழி புணர்தலும் ஒரு சொல் நிலைமொழி வருமொழிகளாக அடுக்கிவருதலும் ஆம். ஆகவே, **அல்வழித் தொகாநிலைகள் ஒன்பதாகும்.**

தொகைநிலைத் தொடர்

1. வினைத்தொகை: செய்பணி; மூடுபனி; கொல்களிறு—இவற்றில், 'செய்பணி' என்பது செய்தபணி; செய்கின்றபணி, செய்யும்பணி என முக்காலத்திலும் விரிதல் காண்க. பிறவும் அன்ன. ஆதலின், காலங்கரந்த பெயரெச்சமே வினைத்தொகை என்க. எனவே, வினைத்தொகையில் நிலைமொழி வினைப்பகுதி யாகவும் வருமொழி பெயராகவும் நிற்கும்.

2. பண்புத்தொகை: வெண்ணிலா; செந்தாமரை; பனை மரம்—இவற்றில், வெண்ணிலா என்பது வெண்மையாகிய நிலா எனவும் செந்தாமரை என்பது செம்மையாகிய தாமரை எனவும் விரியும்.

'பனைமரம்' என்பது பனையாகிய மரம் என விரிதலால் இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாம். இரு பெயரொட்டுப் பண்புத்

தொகையில் சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நிற்கும்.

3. உவமத்தொகை: மதிமுகம்; பவளவாய்; மலர்க்கை— இவை, முறையே மதிபோன்ற முகம், பவளம் போன்ற வாய், (தாமரை) மலர் போன்ற கையென விரியும்.

4 உம்மைத் தொகை: பதினொன்று; கைகால், ஆடு மாடு—இவை, முறையே, பத்தும் ஒன்றும், கையும் காலும், ஆடும் மாடும் என விரியும். உம்மைத்தொகையில் 'உம்' என்னும் இடைச்சொல் நிலைமொழி வருமொழி இரண்டிலும் தொக்கு நிற்கும்.

5. அன்மொழித் தொகை: தேன்மொழி பேசினள்; பெருந் தகை வந்தனன்—இவை, முறையே, தேன் போன்ற மொழியை யுடையவள் பேசினள் எனவும் பெருந்தகையையுடையவன் வந்தனன் எனவும் விரியும். தகை—தன்மை. அன்மொழித் தொகையில் நிலைமொழி வருமொழி இரண்டுக்கும் புறத்தே ஒரு சொல் தொக்கு நிற்கும்.

தொகாநிலைத் தொடர்

1. எழுவாய்த் தொடர்: கந்தன் வந்தான்; மைந்தன் நின்றான்—கந்தன், மைந்தன்: எழுவாய்.

2. விளித் தொடர்: கண்ணா, வா; கந்தா, போ— கண்ணா, கந்தா: விளி.

3. பெயரெச்சத் தொடர்: உழுத மாடு; முற்றிய கதிர்— உழுத, முற்றிய: பெரெச்சம்.

4. வினையெச்சத் தொடர்: தேடிப் பார்; படித்தால் தேறுவாய்—தேடி, படித்தால்: வினையெச்சம்.

5. தெரிநிலை வினைமுற்றுத் தொடர்: வந்தான் கந்தன்; நின்றான் மைந்தன்—வந்தான், நின்றான்: தெரிநிலை வினைமுற்று.

6. குறிப்பு வினைமுற்றுத் தொடர்: கரியன் கண்ணன்; சிறியன் வேலன்—கரியன், சிறியன்: குறிப்பு வினைமுற்று.

7. இடைச்சொற் றொடர்: மற்றொன்று; இனிச் செல்வாய்—மற்று, இனி: இடைச்சொல்.

8. உரிச்சொற் றொடர்: சாலப் பெரிது; தவப் பிஞ்சு—சால், தவ: உரிச்சொல்.

9. அடுக்குத் தொடர்: தேள் தேள்; போ போ—அடுக்கு.

தொகை நிலையாகவும் தொகா நிலையாகவும் வரும் அல்வழிப் புணர்ச்சி பதினான்கு வகைப்படுதலை மேலே காட்டிய உதாரணங்களாற் கண்டு கொள்க.

[தெரிநிலைவினை என்பது செயலுங் காலமும் வெளிப்படையாகத் தெரிய நிற்கும் வினை. குறிப்புவினை என்பது செயலும் காலமும் வெளிப்படையாக வன்றிக் குறிப்பாக அறிய நிற்கும் வினை.]

ந. சூ. வேற்றுமை ஐம்முதல் ஆறும்; அல்வழி
தொழில்பண் புவமை உம்மை யன்மொழி
எழுவாய் விளிஈ ரெச்சம் முற்றிடையுரி
தழுவு தொடரடுத் தெனஈ ரேழே. (கரு)

[மேலே காட்டிய உதாரணங்களுள் அடுக்குத் தொடர் தவிர மற்றவை யெல்லாம் நிலைமொழியோடு வருமொழி பொருளால் தழுவிய தொடர்களாகும். ஆதலால் அவை 'தழுவு தொடர்' எனக் கூறப்படும். இனி, வேற்றுமை, அல்வழி ஆகிய இருவழிகளிலும் நிலைமொழியோடு வருமொழி பொருளால் தழுவாத தொடர்களும் உண்டு. அவைகள் 'தழாத் தொடர்' எனக் கூறப்படும். வேற்றுமையில் உருபும் பயனும் உடன் தொக்க தொகையாக வருபவையெல்லாம் தழாத் தொடர்களே. அல்வழியில் அடுக்குத் தொடர் தழாத் தொடர் ஆம். "சுரையாழ அம்மி மிதப்ப" என்பதில் உள்ள தொடர்கள் 'சுரை மிதப்ப', 'அம்மி ஆழ' எனக் கூட்டப்படுதலால் அவையும் அல்வழியில் தழாத் தொடருக்கு உதாரணம் ஆகும்.]

இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி

99. புணர்ச்சி, எழுத்துக்களுக்கு உளதாகும் நிலைமை பற்றி, **இயல்பு புணர்ச்சி** எனவும் **விகாரப் புணர்ச்சி** எனவும் இருவகைப்படும்.

இவ் விருவகைப் புணர்ச்சியும் எழுத்துக்களின் நிலைமை பற்றிய தாதலின் **எழுத்துப்புணர்ச்சி** என வழங்கப்படும்.

100. **இயல்பு புணர்ச்சியாவது** சொற்கள் புணரும் போது நிலைமொழி வருமொழிகளிலுள்ள எழுத்துக்கள் யாதொரு விகாரமும் அடையாது தம் மியல்பாக நிற்றல். விகாரம்—வேறுபாடு.

(உ - ம்) கல்வி + சிறந்தது = கல்வி சிறந்தது.
பால் + பருகினான் = பால் பருகினான்.
சுடு + சோறு = சுடு சோறு.
நெல் + வயல் = நெல் வயல்.
வாழை + மரம் = வாழை மரம்.
நீர் + ஓட்டம் = நீரோட்டம்.
கடல் + ஆழம் = கடலாழம்.

இவற்றுள், நிலைமொழி வருமொழிகளிலுள்ள எழுத்துக்கள் யாதொரு விகாரமும் அடையாது இயல்பாக நிற்றல் காண்க. 'நீரோட்டம்', 'கடலாழம்' என்பவற்றில் மெய்யோடு உயிர் ஒன்றுவது இயல்பே; விகாரமன்று.

ந. சூ. விகார மனைத்தும் மேவல தியல்பே. (கசு)

101. **விகாரப் புணர்ச்சியாவது** சொற்கள் புணருங்கால் நிலைமொழி வருமொழிகள் முதல் இடை இறுதி என்னும் மூன்றிடங்களிலும் **தோன்றல் திரிதல் கெடுதல்** என்னும் விகாரங்களுள் ஒன்றையேனும் பலவற்றையேனும் அடைதல்.

விகாரப் புணர்ச்சி 'சந்தி' எனவும் கூறப்படும். சந்தியில் 'தோன்றல்' விகாரம் **மிகுதல்** எனவும் வழங்கப்படும்.

135836

தோன்றல்—எழுத்தேனும் சாரியையேனும் புதிதாகத் தோன்றுதல்.

திரிதல்—ஒரு எழுத்து வேறொரு எழுத்தாக மாறுதல்.

கெடுதல்—உள்ள எழுத்து நீங்குதல்.

உதாரணம்

வாழை + காய்	=	வாழைக்காய்	தோன்றல்.
பலா + பழம்	=	பலாப்பழம்	
நெல் + பயிர்	=	நெற்பயிர்	திரிதல்.
கல் + தூண்	=	கற்றூண்	
மரம் + வேர்	=	மரவேர்	கெடுதல்.
அறம் + விலை	=	அறவிலை	
வேல் + கட்டை	=	வேலங்கட்டை	தோன்றலும் திரிதலும்.
ஆல் + சருகு	=	ஆலஞ்சருகு	
வேல் + மரம்	=	வேலமரம்	தோன்றலும் கெடுதலும்
தென்னை + பிள்ளை	=	தென்னம்பிள்ளை	
பனை + காடு	=	பனங்காடு	தோன்றலும் திரிதலும் கெடுதலும்.
ஆவிரை + செடி	=	ஆவிரஞ்செடி	
தென்னை + தோப்பு	=	தென்னந்தோப்பு	
பாறை + கல்	=	பாறுங்கல்	

'வேலங்காடு', 'ஆலஞ்சருகு' என்பவற்றில் 'அம்', என்னும் சாரியை தோன்றி அதனீறு திரிந்தது. 'வேலமரம்' என்பதில் 'அம்' சாரியை தோன்றி அதனீறு கெட்டது. 'தென்னம் பிள்ளை' என்பதில் நிலைமொழி யீற்றிலுள்ள ஐகாரம் கெட்டு 'அம்' சாரியை தோன்றியது. 'பனங்காடு' முதலிய மூன்றிலும் நிலைமொழி யீற்று ஐகாரம் கெட்டு 'அம்' சாரியை தோன்றி அதனீறு திரிந்தது. 'பாறுங்கல்' என்பதில் ஐகாரம் கெட்டு 'ஆம்' என்னும் சாரியை தோன்றி அதனீறு திரிந்தது.

குறிப்பு :—தோன்றல், திரிதல், கெடுதல் இம்மூன்று விகாரமும் புணர்ச்சி சம்பந்தப்பட்டவை யாதலில் புணர்ச்சி விகாரம் எனக் கூறப்படும்.

ந. சூ. தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழிமூ விடத்தும் ஆகும். (கஎ)

மிகுதல்

உயிரின் முன் உயிர்

[உடம்படு மெய்]

102. வருமொழி முதலில் உயிரெழுத்துவரின், நிலைமொழி ஈற்றிலுள்ள இ ஈ ஐ இம்மூன்று உயிரின் பின் யகரமெய்யும் மற்றைய உயிரெழுத்துக்களின் பின் வகர மெய்யும் 'ஏ' என்னும் உயிரின்பின் யகரமும் வகரமுமாகிய இவ்விரண்டு மெய்களும் உடம்படு மெய்களாக வரும்.

யகர மெய்யாவது 'ய்' என்பது; வகர மெய்யாவது 'வ்' என்பது. உடம்படு மெய்யாவது நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் உள்ள உயிர்களை உடன்படுத்தும் (சேர்க்கும்) மெய்; வரும் உயிருக்கு உடம்பாக அடுக்கும் மெய்யெனினும் பொருந்தும்.

[புணர்ச்சி விதி கூறும்போது உயிர்மெய்யெழுத்திலுள்ள உயிர் மெய் இவற்றை வெவ்வேறாகக்கருதியே விதி கூறப்படும்.]

உதாரணம்

மணி + ஓசை	=	மணியோசை	யகர உடம்படு மெய்
தீ + ஆறும்	=	தீயாறும்	
பனை + ஏடு	=	பனையேடு	
பல + ஆறு	=	பலவாறு	வகர உடம்படு மெய்
மா + இலை	=	மாவிலை	
திரு + ஆரூர்	=	திருவாரூர்	
பூ + வேது	=	பூவேது	
கோ + இல்	=	கோவில்	
கௌ + என்க	=	கௌவென்க	
அவனே + அழகன்	=	அவனேயழகன்	யகர வகர உடம்படு மெய்கள்.
சே + உழுதது	=	சேவுழுதது	

ந. சூ. இ ஈ ஐ வழி யவ்வும், ஏனை
உயிர்வழி வவ்வும், ஏமுனிவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும். (கஅ)

உயிர்முன் வல்லினம்

[பொது விதி]

103. இயல்பாக வேனும் விதியாக வேனும் நிலைமொழி ஈற்றில் நின்ற உயிர்முன் வருமொழி முதலில் உள்ளவையும் பின்சிறப்பு விதி கூறப்படாதனவும் ஆகிய க ச த ப என்னும் வல்லினமெய்கள் பெரும்பாலும் மிகும்.

இயல்பு உயிரீறு என்பது சொல்லிறுதியில் இயல்பாக உயிர் நிற்பது. விதியுயிரீறு என்பது சொல்லிறுதியில் இயல்பாக நின்ற உயிராவது மெய்யாவது ஒரு விதிபற்றி நீங்க மற்றொரு உயிர் நிற்பது.

உதாரணம்

வாழை + காய்	=	வாழைக்காய்	இயல்பு உயிரீற்றின் முன் வலி மிக்கன
களா + செடி	=	களாச்செடி	
இசை + தட்டு	=	இசைத்தட்டு	
தேடி + பிடி	=	தேடிப்பிடி	
மர + கிளை	=	மரக்கிளை	விதி உயிரீற்றின் முன் வலி மிக்கன
அற + செயல்	=	அறச்செயல்	
பண்டை + தவம்	=	பண்டைத்தவம்	
நேற்றை + பொழுது	=	நேற்றைப்பொழுது	

குறிப்பு:— மரம் என்பது 'மர' எனவும் அறம் என்பது 'அற' எனவும் நின்றமைக்கு விதி பின்னே 'மகர வீறு' என்னுந் தலைப்பிற்காண்க. பண்டு என்பது 'பண்டை' எனவும் நேற்று என்பது 'நேற்றை' எனவும் 'ஐ' காரச் சாரியை பெற்றன.

ந. சூ. இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன்
க ச த ப மிகும்வித வாதன மன்னே. (கசு)

'பூ' முன் வல்லினம்

104. 'பூ' என்னும் பெயர்ச் சொல்லின் முன் வருகின்ற வல்லினம் மிகுதலேயன்றி அதற்கினமாகிய மெல்லினமும் மிகும்.

உதாரணம்

பூ + செடி = பூச்செடி	}	வருமொழி முதலில் உள்ள வல்லினம் மிகுந்தது.
பூ + கடை = பூக்கடை		
பூ + கொடி = பூங்கொடி	}	வருமொழி முதலில் உள்ள க ச த ப என்னும் வல்லின மெய்களுக்கினமாகிய ங ஞ ந ம என்னும் மெல்லின மெய்கள் மிகுந்தன.
பூ + சோலை = பூஞ்சோலை		
பூ + தடம் = பூந்தடம்		
பூ + பொழில் = பூம்பொழில்		

ந. சூ. பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும். (உ0)

கெடுதலும் திரிதலும்

குற்றியலுகரத்தின் முன்னும் சில முற்றியலுகரத்தின் முன்னும் உயிரும் யகரமும்

105. குற்றியலுகரம் வருமொழி முதலில் உயிர் வந்தால் தான் கூடி நிற்கும் மெய்யை விட்டு நீங்கும்; வருமொழி முதலில் யகரம் வந்தால் இகரமாகத் திரியும்.

முற்றியலுகரமும் சில இடங்களில் அத்தன்மையதாகும்—உயிர் வர உகரம் கெடுதலும் யகரம் வர உகரம் இகரமாகத் திரிதலுமாகிய அவ்விரு விதியையும் பெறும்.

உதாரணம்

சோறு	+	ஆயிற்று	=	சோறாயிற்று	}	குற்றியலுகரம் கெட்டது.
பந்து	+	ஆட்டம்	=	பந்தாட்டம்		
சோறு	+	யாது	=	சோறியாது	}	குற்றியலுகரம் இகரமாகத் திரிந்தது.
பந்து	+	யாது	=	பந்தியாது		
செலவு	+	ஆயிற்று	=	செலவாயிற்று	}	முற்றியலுகரம் கெட்டது.
கதவு	+	எங்கே	=	கதவெங்கே		
செலவு	+	யாது	=	செலவியாது	}	முற்றியலுகரம் இகரமாகத் திரிந்தது.
கதவு	+	யாது	=	கதவியாது		

[குற்றியலுகரம் திரிந்த இகரம் குற்றியலிகரம் எனவும் முற்றியலுகரம் திரிந்த இகரம் முற்றியலிகரம் எனவும் வழங்கப்படும்.]

குறிப்பு :—சில இடங்களில் குற்றியலுகரம் உயிர்வரக் கெடாது ; அவ்விடங்களில் உடம்படு மெய் தோன்றும். 'காண்பதுவும்', 'அழைப்பதுவே' என வருதல் காண்க.

ந. சூ. உயிர்வரின் உக்குறன் மெய்விட் டோடும் ;
யவ்வரின் இய்யாம் ; முற்றுமற் றொரோ வழி. (உக)

கெடுதலும் மிகுதலும் திரிதலும்

மகரவீறு

106. மகரமெய்யை இறுதியிலுடைய சொற்கள் வருமொழியோடு புணருங்கால், ஈற்று மெய் கெட்டு, உயிரீறு போலப் புணரும்; வருமொழி முதலில் வல்லினம் வரின் மகரமெய் கெடாது அவ் வல்லினத்துக் கினமான மெல்லினமாகத் திரியப் பெறும்.

உதாரணம்

அறம் + நூல் = அறநூல் மரம் + வேர் = மரவேர் கலம் + நெல் = கலநெல்	மெல்லினமும் இடையினமும் வர மகரம்கெட்டு உயிரீறு போல இயல்பாயின.
நிலம் + அறை = நிலவறை மரம் + உரி = மரவுரி அறம் + உரை = அறவுரை	உயிர் வர மகரம் கெட்டுஉயிரீறுபோல உடம்படுமெய் வரப் பெற்றன.
அறம் + சாலை = அறச்சாலை மரம் + பட்டை = மரப்பட்டை புறம் + படு = புறப்படு	வல்லினம் வர மகரம் கெட்டு உயிரீறு போல அவ்வல்லினம் மிகப்பெற்றன.
இடம் + கொடு = இடங்கொடு அறம் + செய் = அறஞ்செய் வரம் + தருக = வரந்தருக	வல்லினம் வர மகரங்கெடாது அவ் வல்லினத்துக் கினமாகத் திரியப்பெற்றன.

ந. சூ. மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்
வன்மைக் கினமாத் திரிபவும் ஆகும். (உஉ)

இயல்பு

மெய்ம்முன் உயிர்

[பொது விதி]

107. நிலைமொழி இறுதியில் மெய்யெழுத்து நிற்பின், அதன் முன் வரும் உயிர் அம்மெய்யோடு கூடுதல் இயல்பே.

(உ - ம்)	பால்	+ ஆடை	=	பாலாடை.
	கோல்	+ ஆட்டம்	=	கோலாட்டம்.
	தாள்	+ இட்டான்	=	தாளிட்டான்.
	கேள்	+ என்றார்	=	கேளென்றார்.
	கடல்	+ ஓரம்	=	கடலோரம்.
	புகழ்	+ அழியாது	=	புகழழியாது.
	அறிஞர்	+ எல்லாம்	=	அறிஞரெல்லாம்.
	எங்கள்	+ ஊர்	=	எங்களூர்.

மெய்களோடு உயிர்கள் கூடுகின்றன.

ந. சூ. உடல்மேல் உயிர்வந்தொன்றுவ தியல்பே. (உ௫)

தனிக்குறிலடுத்த மெய்ம்முன் உயிர்

108. தனிக் குற்றெழுத்தை யடுத்து வந்த மெய் வருமொழி முதலில் உயிர் வந்தால் இரட்டித்து நிற்கும். [இரட்டித்தல்—இரண்டாதல்.]

(உ - ம்)	பல்	+ ஆட்டம்	=	பல்லாட்டம்.
	கண்	+ ஓட்டம்	=	கண்ணோட்டம்.
	புள்	+ ஈட்டம்	=	புள்ளீட்டம்.
	பொன்	+ உலகம்	=	பொன்னுலகம்.
	பொய்	+ அன்று	=	பொய்யன்று
	மெய்	+ என்றார்	=	மெய்யென்றார்.

நிலைமொழி ஒற்றுக்கள் இரட்டித்தன.

குறிப்பு :—இரட்டல் நிலைமொழியோடு இயைபுடையதாய் இருக்கும்; மிகுதல் வருமொழியோடு தொடர்புடையதாய் இருக்கும்.

ந. சூ. தனிக்குறில் முன்னொற் றுயிர்வரின் இரட்டும். (உ௬)

பயிற்சி

I 1. வேற்றுமைப் புணர்ச்சி என்றால் என்ன? அல்வழிப் புணர்ச்சி என்றால் என்ன?—உதாரணம் தருக.

2. வேற்றுமைப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? எங்ஙனம்? அல்வழிப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? எங்ஙனம்?

3. கீழ்க் காண்பவைகளில் ஒவ்வொன்றும் இன்ன புணர்ச்சியில் இன்ன தொடர் எனக் கூறுக. [காட்டு: சோறு தின்றான்—வேற்றுமைப் புணர்ச்சி; இரண்டாம் வேற்றுமைத் தொகை. சென்றான் முருகன்—அல்வழிப் புணர்ச்சி; வினைமுற்றுத் தொடர்.]

சாத்தன் சென்றான்; வீடு செல்; கந்தா, வா; சால அழகிது; பெய் மழை; இனிப் போகலாம்; தயிர்ச் சோறு; ஆட்டுப் பால்; கடைக்குப் போ; ஓடாக் குதிரை; முருகன் புத்தகம்; உண்ட களைப்பு; பேசாமடந்தை; நல்ல வழி; கெட்ட பையன்; கருங்குரங்கு; இராப் பகல்; கபில பரணர்; குழைந்த சோறு; உறை பனி; வேர்க் கடலை; பழம் பால்; ஓடுங் குதிரை; செந்தாமரை; கரிய குவளை; கார் மேகம்; தாழ் குழல் வந்தாள்; பெருந்தகாய் வணக்கம்; கிளி மொழி; அடித்தது காற்று; சிறியன் இவன்; கூடிப் பேசினர்; என்று வந்தாய்; போ போ; வாழ்க வாழ்க; முழவுத் தோள்; பவள வாய்; இன் மொழி; இனிய உணவு; படித்துத் தேறினான்; குளிக்கச் சென்றான்; தமிழ் இனிது; வாழ்க தமிழ்.

II. 1. புணர்ச்சி விகாரங்கள் எவை?—உதாரணம் தருக.

2. இயல்பு புணர்ச்சி என்றால் என்ன?—உதாரணம் காட்டுக.

3. கீழ்க் காண்பவை எவ்வாறு புணரும்?—விதி கூறுக.

தேடி + பார்; களா + இலை; நாகம் + பாம்பு; திரு + அரங்கம்; படு + என்றான்; சாலை + ஓரம்; பூ + தொட்டி; பூ + கா; காற்று + ஓட்டம்; உண்டு + உறங்கினான்; நில் + என்றார்; எழுத்து + எல்லாம்; வரவு + என்ன; குடம் + நீர்; நிலம் + பரப்பு; இடம் +

சிறிது; கடல்+ஆழம்; நில்+என்றான்; மரம்+எறினன்; மக்கள்+எல்லோரும்.

4 கீழ்க் காணும் தொடர்களைப் பிரித்துக் காட்டிப் புணர்ச்சி விதி கூறுக.

வாழையிலை; பலாக்காய்; அலரிப்பூ; காவிரியாறு; திருவானைக்கா; பூம்பாவை; பட்டாடை; மணைக்கிணறு; கலஞ்செய்தான்; மரப்பேழை; வட்டக்கிணறு; வருங்காலம்; நாளைப்பொழுது; களவாடினன்; சொல்லாடல்; வயலோரம்; செலவியாது; உடலழகு; ஆட்டமுடிவு; பாடஞ்சொன்னார்; பாடச்சொன்னார்.

யாப்பு

109. யாப்பென்பது செய்யுள். செய்யுட்கள், தோல் தசை என்பு நரம்பு முதலிய தாதுக்களால் உயிருக்கிடமாகப் படைக்கப்பட்ட உடல்போல், பல சொற்களால் பொருளுக்கிடமாகக் கல்வியறிவும் செய்யுளியற்றும் வன்மையுமுடைய புலவரால் அழகு பெறச் செய்யப்படுவனவாம்.

ஆகவே, சொல் எழுத்தால் உண்டாவதாகலின், எழுத்து, சொல், பொருள், அணி என்னும் நான்கும் செய்யுளில் அமைந்திருக்கும்.

[இதனால், தமிழிலக்கணமும் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் என ஐவகைப்படுதல் காண்க.]

யாப்பு, செய்யுள், பாட்டு, பா, கவி என்பன ஒரு பொருட் சொற்கள்.

ந. சூ. பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள். (உரு)

110. செய்யுளின் உறுப்புக்கள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என ஆறாகும்.

எழுத்து

111. எழுத்துக்களாவன உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம், குற்றியலுகரம் முதலிய எழுத்துக்கள்.

அசை

112. அசையாவது எழுத்துக்களின் இசைத்தொடர்ச்சியை அசைக்கும் பொழுது பிரிந்துவரும் எழுத்தாலாகிச் சீருக்கு உறுப்பாக நிற்பது. [அசைக்கப்படுவது அசை.]

அவ்வசை நேரசை எனவும் நிரையசை எனவும் இரு வகைப்படும்.

113. நேரசையாவது ஒருகுறிலாயினும் நெடிலாயினும் தனித்தாவது ஒற்றடுத்தாவது வருவது. [நேர் - தனிமை.]

(உ - ம்.) ஆ ழி ; வெள் வேல்.

இவற்றில், ஆ—தனி நெடிலசை ; ழி—தனிக்குறிலசை ; வெள்—குறில் ஒற்றடுத்த அசை; வேல்—நெடில் ஒற்றடுத்தஅசை.

114. நிரையசையாவது குறிலிணையாயினும் குறினெடிலாயினும் தனித்தாவது ஒற்றடுத்தாவதுவருவது. [நிரைதல்- இணைதல். குறிலிணை - இணைந்துவரும் இரு குறில். குறில் நெடில் - இணைந்துவருங் குறிலும் நெடிலும்.]

(உ-ம்.) பனி ; நிலம் ; நிலா ; குழாம்.

இவற்றில், பனி—குறிலிணை தனித்து வந்த நிரையசை ; நிலம்—குறிலிணை ஒற்றடுத்து வந்த நிரையசை ; நிலா—குறினெடில் தனித்துவந்த நிரையசை; குழாம்-குறினெடில் ஒற்றடுத்து வந்த நிரையசை.

மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

இச் செய்யுளில் உள்ள சீர்கள் ஏழு. அவைகளை 'மலர் மிசை—யே கினன்—மா ணடி—சேர்ந் தார்—நில மிசை—நீ டுவாழ்—வார்' என அசை பிரித்துப் படித்துச் சீர்க்கு உறுப் பாக இருக்கும் நேரசை நிரையசைகளைக் கண்டுகொள்க.

சீர்

115. சீர் என்பது நேரசை நிரையசைகள் தனித்தாவது இரண்டேனும் மூன்றேனும் நான்கேனும் சேர்ந்தாவது இலயம்பட இசைத்துச் சீர் போன்று நிற்பது. [சீர் - தாளம், தாளவறுதி.]

116. சீர், தான் கொண்டு நிற்கும் அசையின் எண்ணிக்கை பற்றி, ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச் சீர் என நான்கு வகைப்படும்.

117. ஓரசைச் சீர் என்பது நேரசையாயினும் நிரையசையாயினும் தனித்து நின்று சீராய் வருவது. ஓரசைச் சீர் இரண்டு வகையாகும்.

உதாரண வாய்பாடு : நேர் — **நாள்** ; நிரை — **மலர்.**

குறிப்பு :—குறிலும் நெடிலும் தனித்தும் ஒற்றடுத்தும் வரும் நேரசை நாள் என்னும் வாய்பாட்டாலும், குறிலிணையும் குறினெடிலும் தனித்தும் ஒற்றடுத்தும் வரும் நிரையசை **மலர்** என்னும் வாய்பாட்டாலும் கூறப்படும். வாய்பாடு என்பது சொல்முறை. ஓரசைச் சீரை அசைச்சீர் என்று கூறுதல் மரபு. அசைச்சீர் பெரும்பாலும் வெண்பாவின் இறுதியில் வரும்.

118. **ஈரசைச் சீர்** என்பது இரண்டசைகள் கூடிச் சீராய் நிற்பது. ஈரசைச் சீர் **நான்கு** வகையாம்.

உதாரண வாய்பாடு :

நேர்நேர் — தேமா	}	இவை மாச்சீர் எனப்படும்.
நிரைநேர் — புளிமா		
நிரைநிரை — கருவிள	}	இவை விளச்சீர் எனப்படும்.
நேர்நிரை — கூவிள		

குறிப்பு :—தேமா, புளிமா, கருவிள, கூவிள என்பவை ஈரசைச் சீரின் வாய்பாடுகள். ஈரசைச் சீர் இயற்சீர் எனவும் அகவற்சீர் எனவும் கூறப்படும்.

119. **மூவசைச் சீர்** என்பது மூன்றசைகள் கூடிச் சீராய் நிற்பது. அது, மேற்காட்டிய ஈரசைச் சீர்கள் நான்கன் இறுதியிலும் நேரசையும் நிரையசையும் தனித் தனியே கூடி வருதலால், எட்டு வகையாம்.

உதாரண வாய்பாடு :

நேர் நேர் நேர்	—தேமாங்காய்	இவை காய்ச்சீர் என்று கூறப்படும்.
நிரை நேர் நேர்	—புளிமாங்காய்	
நிரை நிரை நேர்	—கருவிளங்காய்	
நேர் நிரை நேர்	—கூவிளங்காய்	
நேர் நேர் நிரை	—தேமாங்கனி	இவை கனிச்சீர் என்று கூறப்படும்.
நிரை நேர் நிரை	—புளிமாங்கனி	
நிரை நிரை நிரை	—கருவிளங்கனி	
நேர் நிரை நிரை	—கூவிளங்கனி	

குறிப்பு :—தேமாங்காய் முதலியனவும் தேமாங்கனி முதலியனவும் மூவசைச்சீரின் வாய்பாடுகள். காய்ச்சீர் **வெண்சீர்** எனவும் கனிச்சீர் **வஞ்சிச் சீர்** எனவும் கூறப்படும்.

120. நாலசைச்சீர் என்பது நான்கசைகள் கூடிச் சீராய் நிற்பது. அது, மூவசைச்சீர்கள் எட்டன் இறுதியிலும் நேரும் நிரையும் தனித்தனியே கூடி வருதலால், பதினாறு வகையாம். அவை **தேமாந்தண்பூ** முதலிய வாய்பாடுகளாலும் **தேமாந்தண்ணிழல்** முதலிய வாய்பாடுகளாலும் கூறப்படும்.

குறிப்பு :—நாலசைச்சீர்கள் செய்யுட்களில் பெரும்பான்மையாக வருதல் இல்லை ; சங்கச் செய்யுட்களில் சிறுபான்மை வரும்.

அடி

121. **அடி** என்பது இருசீர், முச்சீர், நாற்சீர் இங்ஙனமாகச் சீர்கள் பலவற்றைக் கொண்டு தளைகளை அடுத்து முடிவது.

தளை - சீர்கள் ஒன்றோடொன்று சேருங்கால் உண்டாகும் இசைப் பிணிப்பு ; அடி - அடுத்து முடிவது.

அடி, தான் கொண்டு நிற்கும் சீருக்குத் தக்கவாறு, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

122. **குறளடி** என்பது இரண்டு சீர்களைக் கொண்டு முடிவு பெற்று நிற்கும் அடி. [குறள் - குறுகியது, சிறியது]

(உ - ம்) 1. அறஞ்செய விரும்பு.
2. ஆறுவது சினம்.
3. இயல்வது கரவேல்.
4. உண்டநெ ருப்பைக்
கண்டனர் பற்றிக்
கொண்டனை கென்றான்
அண்டரை வென்றான்.

இச்செய்யுட்கள் நான்கனுள் முதல் மூன்றிலும் ஒவ்வொரு குறளடி உளது; நான்காவதில் நான்கு குறளடிகள் அமைந்துள்ளன.

123. சிந்தடி என்பது மூன்று சீர்களைக் கொண்டு முடிவுபெற்று நிற்கும் அடி [சிந்து - குறளினும் சிறிது நெடியது.]

(உ - ம்) 1. கடையரே கல்லா தவர்.
2. கற்றனைத் தூறும் அறிவு.
3. மெய்ப்பொருள் காண்ப தறிவு.
4. பற்றுதிர் பற்றுதிர் என்பார்
எற்றுதிர் எற்றுதிர் என்பார்
முற்றினர் முற்றுமு னிந்தார்
கற்றுணர் மாருதி கண்டான்.

இவை நான்கனுள் முதல் மூன்றிலும் ஒவ்வொரு சிந்தடி உளது; நான்காவதில் நான்கு சிந்தடிகள் அமைந்துள.

குறிப்பு :— முதல் மூன்றும் ஒவ்வொரு திருக்குறளின் இறுதியடி. திருக்குறளின் இறுதியடிகளெல்லாம் சிந்தடிகளே.

124. அளவடி என்பது நான்கு சீர்களைக் கொண்டு முடிவு பெற்று நிற்கும் அடி. [அளவு - குறுகலும் நீளலுமின்றி அளவு பெற்று நிற்பது.]

அளவடி நேரடி எனவுங் கூறப்படும். நேர் - தலைமை, சிறப்பு.

(உ - ம்) 1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
3. கல்விக் கழகு கசடற மொழிதல்.
4. உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.

இவை நான்கனுள் முதல் மூன்றிலும் ஒவ்வொரு அளவடி உளது; நான்காவதில் நான்கு அளவடிகள் அமைந்துள.

125. நெடிலடி என்பது ஐந்து சீர்களைக்கொண்டு முடிவு பெற்று நிற்கும் அடி. [நெடில்—நீண்டது]

உதாரணம்

1. அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் அருட்கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு [ளித்
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

2. திருவரங் காவுறை மார்பா திசைமுகன் சேவிப்பக்கந்
திருவரங் காதரித் தின்னிசை பாடத் திருக்கண்வளர்
திருவரங் காவுன் பழவடி யேற்கருள் செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனுனக் கேதொண்டு செய்வதற்கே.

இவை இரண்டிலும் நந்நான்கு நெடிலடிகள் அமைந்துள்ளன.

126. கழிநெடிலடி என்பது சீர்கள் ஆறும் அதற்கு மேற்பட்டும் வர அவற்றைக் கொண்டு முடிவு பெற்று நிற்கும் அடி. [கழிநெடில் - மிக நீண்டது.]

கழிநெடிலடி அதிலுள்ள சீர்களின் தொகைக்குத் தக்கவாறு அறுசீர்க் கழிநெடிலடி, எழுசீர்க் கழிநெடிலடி, எண்சீர்க் கழிநெடிலடி என்றிங்ஙனம் கூறப்படும்.

உதாரணம்

1. அல்லையாண் டமைந்த மேனி யழகனும் அவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கள்நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம் என்றான்.

2. மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்தி நாதன்.

இவை இரண்டிலும் நந்நான்கு கழிநெடிலடிகள் அமைந்துள்ளன. இவைகள் அறுசீர்க் கழிநெடிலடிகள்.

எழுசீர்க்கழிநெடிலடி, எண்சீர்க்கழிநெடிலடி முதலியவற்றை அவைகள் செய்யுட்களில் வரும்போது ஆங்காங்கே கண்டுகொள்க

பயிற்சிக் குறிப்பு

இது காறும் விளக்கிக் காட்டப்பட்ட அசை சீர் அடி ஆகிய இவைகள் செய்யுளின் முக்கியமான உறுப்புக்கள். அவ்வுறுப்புக்கள் அமைந்திருத்தலே செய்யுளின் பொதுவிலக்கணமாம். இனி, பாட புத்தகங்களில் உள்ள செய்யுட்களெல்லாம் சீர்பிரித்து அடியடியாக அமைக்கப்பட்டிருக்கும். ஆதலின், அவைகளை எளிதாகச் சீர்பிரித்து அடியடியாகப் படித்துப் பயிற்சி பெறலாம். அங்ஙனம் பயிற்சி பெற்றால் செய்யுளின் பொதுவிலக்கணம் மனத்தில் நன்கு பதியும்.

அணி

127. அணி என்பது செய்யுளுக்கும் உரைநடைக்கும் அழகைக் கொடுப்பது. அணிகள் உவமை, உருவகம் முதலியனவாகப் பல வகைப்படும்.

உவமையணி

128. உவமையணி என்பது ஒரு பொருளோடு மற்றொரு பொருளுக்கு ஒப்புமை தோன்றக் கூறுவது.

'பலாப்பழம் தேன்போல இனிமையாக இருக்கிறது'—இவ் வாக்கியத்தில், பலாப்பழத்தின் இனிமைக்குத் தேனின் இனிமை ஒப்புமையாகக் கூறப்பட்டுளது. ஆதலால், இது உவமையணி பெற வந்த வாக்கியம். இதில், முக்கியமான பொருள் பலாப்பழம். அது **உபமேயம்** எனக் கூறப்படும். பலாப்பழத்துக் குவமை தேன். அது **உபமானம்** எனக் கூறப்படும். அவ் விரண்டுக்குமுள்ள பொதுவான தன்மை இனிமை. அது **பொதுத்தன்மை** எனக் கூறப்படும். போல என்பது **உவமவுருபு**. எனவே, உவமையணியில் **உபமானம், உபமேயம், பொதுத்தன்மை, உவமவுருபு** என நான்கு உறுப்புக்கள் உளவாகும்.

உபமானம் என்பது உவமையாக வரும் பொருள்; உபமேயம் என்பது உவமிக்கப்படும் பொருள்; பொதுத் தன்மை என்பது அவ்விரண்டுக்கு மூள்ள பொதுவான தன்மை. உவமவுருபுகளாவன போல புரைய, ஒப்ப முதலியன. உவமவுருபு தொக்கு நிற்றலும் உண்டு. அது உவமைத்தொகை எனப்படும்.

உவமையணியில் உவமானம் முதலிய நான்குறுப்புக்களும் விரிந்து நிற்றலேயன்றி, உவமவுருபு பொதுத் தன்மை ஆகிய இவை தொக்கு நிற்றலும் உண்டு. உவமவுருபு முதலியவை தொக்கு நிற்கும் உவமை **தொகையுவமை** யெனவும் விரிந்து நிற்கும் உவமை **விரியுவமை** யெனவுங் கூறப்படும்.

'உணவு அமுதம்போல் இனிதாக இருந்தது'—இது உவமையணிபெற வந்த வாக்கியம். இதில், அமுதம்—உபமானம்; உணவு—உபமேயம்; இனிமை—பொதுத்தன்மை; போல்—உவமவுருபு. இவ்வாக்கியத்தில் நான்குறுப்புக்களும் விரிந்து நிற்றலால் இது **விரியுவமை** யாகும்.

இனி, 'அமுதவுணவு', 'அமுதம் போன்ற உணவு' என்றிங்ஙனம் உவமவுருபும் பொதுத்தன்மையும் தொக்கு

நிற்றலும் பொதுத்தன்மை மாத்திரம் தொக்கு நிற்றலும் உண்டு. இங்ஙனம் வருவன **தொகையுவமை** ஆகும்.

உவமையணி வண்ணம், வடிவம், தொழில், பயன் என்னும் நான்கும் பற்றி வரும். அவை முறையே வண்ணவுவமை, வடிவவுவமை, தொழிலுவமை, பயனுவமை எனப்படும். [வண்ணம் - நிறம்.]

பவளவாய்—வண்ணவுவமை; **பிறைநுதல்**-வடிவவுவமை; **புலிபோலப் பாய்ந்தான்**—தொழிலுவமை; **கற்றறிந்தார் கேண்மை நுனியிற் கரும்பு தின்றற்று**—பயனுவமை.

உபமானம் உவமை யெனவும், உபமேயம், முக்கிய பொருளாதலால், பொருள் எனவும் கூறப்படும்.

(உ - ம்) எய்யென வெழுபகை யெங்கு மின்மையால்
மொய்பெறு தினவுறு முழவுத் தோளினன்
வையகம் முழுவதும் வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக் காத்தினி தரசு செய்கின்றான்.

இதில், தசரதன் தன் நாட்டைப் பாதுகாத்தலாகிய அரசாட்சிக்கு ஓர் வறியவன் தன் வயலைப் பாதுகாத்தலாகியசெயல் உவமையாகச் சொல்லப் பட்டிருத்தலின், இது உவமையணி பெற்றுவந்த செய்யுள். இவ்வுவமை தொழிலுவமை. இன்னும், 'முழவுத்தோள்' என்பது வடிவவுவமையாக வந்துள்ளமையும் காண்க. 'செய்யென' என்பதிலுள்ள என என்பது உவமவுருபு. செய் - வயல்.

உருவகவணி

129. உருவகஅணி என்பது உவமையையும் பொருளையும் வேறு வேறாகக் கூறாது உவமையின் தன்மையைப் பொருள்மேலேற்றி இரண்டையும்ஒன்றுபடுத்திக்கூறுவது.

உருவகவணியில் 'ஆகிய' முதலிய பண்புருபுகள் விரிந்தேனும் மறைந்தேனும் நிற்கும்.

'அருளாகிய குழந்தை பொருளாகிய செவிலியால் வளரும்'—இதற்குக் 'குழந்தைபோன்ற அருள் செவிலி

போன்ற பொருளால் வளர்ச்சியுறும்' என்பது பொருள் இதனில் குழந்தை, செவிலி ஆகிய உவமைப் பொருள்கள் உவமவுருபுகொடுத்து வேறுவேறாகக்கூறப்படாமல்அருள், பொருள் ஆகிய உவமிக்கப்படு பொருள்களோடு ஒன்று படுத்தி, 'அருளாகிய குழந்தை', 'பொருளாகிய செவிலி' எனக் கூறப்பட்டிருத்தல் காண்க. குழந்தை செவிலி ஆகிய உவமைகளின் வளருந்தன்மையும் வளர்க்குந் தன்மையும் முறையே அருள் பொருள் ஆகிய (உபமேயப்) பொருள்களின்மேல் ஏற்றப்பட்டன. இங்ஙனங் கூறுதல் உருவகப்படுத்தல் எனப்படும். இதுவே **உருவக அணி.**

(உ - ம்.)

1. புலவர்கள் பொழியும் கவிமழை கண்டு கலைமகளாகிய மயில் களிப்புறும்.

2. அறிவாகிய ஒளியால் அறியாமையாகிய இருள் நீங்கும்.

பயிற்சி

1. 'காக்கை தன் இனமாகிய மற்றைக்காக்கைகளை யழைத்து அவைகளோடு உணவு கொள்ளும்.' 'நல்லோர் தம் இனத்தாரை யழைத்து அவர்களோடு உண்டு மகிழ்வர்'—இவ்விரண்டு வாக்கியங்களையும் சேர்த்து உவமையணியுள்ள ஒரு வாக்கியமாகக் கூறுக.

2. அரசனைக் கொழுகொம்பாகவும் குடிமக்களை அதிற் படரும் கொடிகளாகவும் அமைத்து உருவகவணியில் ஒரு வாக்கியம் வரைக.

கீழ்க்காண்பவற்றுள் உள்ள அணி என்ன அணி?

1. 'நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல், கற்றாரைக் கற்றாரே காமுறுவர்........'

2. 'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி, இனமென்னும் ஏமப் புணையைச் சுடும்.'

3. 'என்பி லதனை வெயில்போலக் காயுமே, அன்பி லதனை யறம்.'

4. பிறவியாகிய பெருங்கடலை நீந்த இறைவன் திருவடியாகிய தெப்பத்தை அடைதல் வேண்டும்.

மொழிப்பயிற்சி

வாக்கியம்

[பொதுவிலக்கணம்]

1. சொற்கள் தொடர்ந்துநின்று ஒரு கருத்தை முடித்துக் காட்டுமாயின் அச் சொற்களின் தொடர்ச்சி **வாக்கியம்** எனப்படும்.

ஒரு வாக்கியத்தில் அமையும் முக்கியமான உறுப்புக்கள் எழுவாயும் பயனிலையும் ஆகும். செயப்படுபொருள் சில வாக்கியங்களில் அமையும்; சில வாக்கியங்களில் அமையாது. சில வாக்கியங்களில் எழுவாய் வெளிப்படையாகத் தோன்றாமல் மறைந்து நிற்றலும் உண்டு. அது **தோன்ரு எழுவாய்** எனக் கூறப்படும். எழுவாயும் பயனிலையுமின்றி எந்த வாக்கியமும் உண்டாகாது.

(உ - ம்) 1. முருகன் நாளை வருவான்—இதில், எழுவாயும் பயனிலையும் அமைந்துள்ளன; செயப்படுபொருள் இல்லை.

2. அவ் வணில் நெல்லைக் கொறிக்கிறது—இதில், எழுவாய் பயனிலை செயப்படுபொருள் மூன்றும் அமைந்துள்ளன.

3. கந்தா, வீடு செல்—இதில் 'நீ' என்பது தோன்ரு எழுவாயாக அமைந்துள்ளது.

அடைமொழி

2. எழுவாய் பயனிலை செயப்படுபொருள் இவைகளையடுத்து வேறு சொற்கள் வருதலும் உண்டு. அங்ஙனம் அடுத்து வருஞ்சொல் அடைமொழி எனப்படும். அடைமொழியை **அடை** எனச் சுருங்கக் கூறுதல் மரபு.

(உ - ம்) நல்ல மாணவர் தமது அரிய நேரத்தைச் செவ்வையாகச் செலவழிப்பர்—இவ்வாக்கியத்தில், எழுவாய்—மாணவர்; பயனிலை—செலவழிப்பர்; செயப்படுபொருள்—நேரம். 'நல்ல'

என்பது எழுவாயை அடுத்துநிற்கும் மொழி; 'செவ்வையாக' என்பது பயனிலையை அடுத்து நிற்கும் மொழி; 'தமது', 'அரிய' என்பவை செயப்படுபொருளை அடுத்துநிற்கும் மொழிகள். ஆதலால், நல்ல என்பது எழுவாயடை; செவ்வையாக என்பது பயனிலையடை; தமது, அரிய என்பவை செயப்படுபொருளடைகள்.

வாக்கியங்களின் பிரிவு

3. வாக்கியங்கள் **தனிவாக்கியம்**, **தொடர்வாக்கியம்**, **கலவைவாக்கியம்** என மூவகைப்படும்.

தனிவாக்கியம்

[Simple Sentence]

4. தனிவாக்கியம் என்பது ஒரே எழுவாயும் ஒரே பயனிலையும் உள்ள வாக்கியம்.

(உ - ம்)

1. தமிழ்மொழி இனிமை வாய்ந்தது.
2. கபிலர் ஒரு சிறந்த தமிழ்ப்புலவர்.
3. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினர்.
4. கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் சிறந்த நண்பர்கள்.

குறிப்பு :—நண்பர்கள் என்னும் பெயர்ப் பயனிலைக்குக் கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையார் என்னும் இரு சொற்களும் சேர்ந்து ஒரே எழுவாயாகும்.

தொடர் வாக்கியம்

[Compound Sentence]

5. தொடர் வாக்கியம் என்பது பல தனி வாக்கியங்கள் தொடர்ந்து நிற்பது. தொடர்வாக்கியத்திலுள்ள தனி வாக்கியங்களைத் தனித்தனியே பிரித்துக் கூறலாம். ஆயினும், அவை ஒன்றோடொன்று தொடர்புற்றிருத்தல் பற்றித் தொடர்வாக்கியமாகக் கூறப்படும்.

(உ - ம்)

1. மழை பெய்தது; குளம் நிரம்பியது.

இதிலுள்ள தனிவாக்கியங்கள் இரண்டு. முன்னதற்கு எழுவாய் 'மழை'; பின்னதற்கு எழுவாய் 'குளம்'.

2. மணிமேகலை வீதி வழியே சென்றாள்; மலர்வனம் புகுந்தாள்; உதயகுமரன் அதனை அறிந்தான்; தேர்மீதிவர்ந்தான்; அம் மலர்வனத்தை அடைந்தான்.

இதிலுள்ள தனி வாக்கியங்கள் ஐந்து. முன்னைய இரண்டுக்கும் எழுவாய் 'மணிமேகலை'; பின்னைய மூன்றுக்கும் எழுவாய் 'உதயகுமரன்'.

3. சேக்கிழார் குன்றத்தூரில் பிறந்தார்; தமிழ் பயின்றார்; பெரும் புலமையடைந்தார்; சோழ மன்னனின் முதலமைச்சரானார்; அவன் வேண்டியவண்ணம் சிவனடியார்கள் வரலாற்றை இனிய தமிழில் ஒரு சிறந்த புராணமாகப் பாடினார்; அதற்குத் 'திருத்தொண்டர் புராணம்' எனப் பெயரிட்டார்; அதனைத் தில்லையில் அரசரும் புலவரும் பிறரும் கூடிய பேரவையில் அரங்கேற்றினார்; 'தொண்டர் சீர் பரவுவார்' என்னும் பட்டமும் பிற சிறப்புக்களும் பெற்றனர்.

இதிலுள்ள தனி வாக்கியங்கள் எட்டு. எட்டுக்கும் எழுவாய் 'சேக்கிழார்'.

தொடர்வாக்கியத்தில் முன்னேயுள்ள வினைமுற்றுக்களையெல்லாம் வினையெச்சங்களாக்கி அவற்றை இறுதியிலுள்ள வினைமுற்றோடு முடித்தல் பெரும்பான்மை மரபு. அவ்வாறு முடிப்பினும் அது தொடர்வாக்கியமே. மேலே உதாரணமாகக் காட்டப்பெற்ற மூன்று தொடர்வாக்கியங்களும் அவ்வாறே முடிக்கப்பட்டிருத்தலைக் கீழே காண்க.

1. மழை பெய்யக் குளம் நிரம்பியது.

2. மணிமேகலை வீதிவழியே சென்று மலர்வனம் புக, உதயகுமாரன் அதனையறிந்து தேர்மீதிவர்ந்து அம் மலர்வனத்தையடைந்தான்.

3. சேக்கிழார் குன்றத்தூரில் பிறந்து, தமிழ் பயின்று, பெரும் புலமையடைந்து, சோழமன்னனின் முதலமைச்சராகி, அவன் வேண்டியவண்ணம் சிவனடியார்கள் வரலாற்றை இனிய தமிழில் ஒரு சிறந்த புராணமாகப் பாடி, அதற்குத் 'திருத் தொண்டர் புராணம்' எனப் பெயரிட்டு, அதனைத் தில்லையில் அரசரும் புலவரும் பிறரும் கூடிய பேரவையில் அரங்கேற்றித் 'தொண்டர் சீர் பரவுவார்' என்னும் பட்டமும் பிற சிறப்புக்களும் பெற்றனர்.

கலவை வாக்கியம்

6. கலவை வாக்கியம் என்பது ஒரு முக்கியமான வாக்கியமும் அதனைச் சார்ந்த வேறொரு வாக்கியமும் கலந்து வருவது.

முக்கியமான் வாக்கியம் **முதன்மை வாக்கியம்** (Princpal sentence) எனவும் அதனைச் சார்ந்து வரும் வாக்கியம் **சார்பு வாக்கியம்** (Sub-ordinate sentence) எனவும் கூறப் படும். சார்பு வாக்கியம் முதன்மை வாக்கியத்தோடு 'என்று' 'என' இவ்விடைச் சொற்களில் ஒன்றால் இணைக்கப்பட்டு முதன்மை வாக்கியத்தின் பயனிலையைத் தழுவி நிற்கும். முதன்மை வாக்கியம் '**என்**' என்னும் பகுதியடியாகப் பிறக்கும் வினைமுற்றால் முடியின், சார்பு வாக்கியம் என்று முதலிய சொற்களால் இணைக்கப்பட வேண்டுவதில்லை.

'என்' என்னும் பகுதியடிாயகப் பிறக்கும் வினை முற்றுக்களாவன '**என்றான்**', '**என்றாள்**', '**என்றார்**' முதலியன.

உதாரணம்

1. அரசியலார் பயிர்த் தொழிலாளருக்கு "**நாங்கள் சத்துள்ள எருவும் நல்ல விதையும் உங்களுக்கு விலையின்றித் தருவோம்**" என்றறிவித்தனர்.

இதில், முதன்மை வாக்கியம் 'அரசியலார் பயிர்த்தொழிலாளருக்கு அறிவித்தனர்' என்பது; சார்பு வாக்கியம் 'நாங்கள் சத்துள்ள எருவும் நல்ல விதையும் உங்களுக்கு விலையின்றித் தருவோம்' என்பது. இவ்விரண்டும் சேர்ந்தே ஒரு கலவை வாக்கியமாக அமைந்திருத்தல் காண்க.

மேலே காட்டிய உதாரணத்தில் சார்புவாக்கியமானது அரசியலார் சொல்லிய வண்ணம் அவர்கள் கூற்றாகவே அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒருவர் கூற்றாக அமைக்கப்படும் வாக்கியம் " " இக்குறிகளுக்குள் காட்டப்படும். இத்தகைய கூற்றை ஆங்கிலத்தில் Direct speech என்பார்கள்; தமிழில் நேர் கூற்று அல்லது தற் கூற்று எனக் கூறலாம். இனி மேலே காட்டிய கலப்பு வாக்கியத்தை 'அரசியலார் பயிர்த்தொழிலாளருக்குத் தாங்கள் சத்துள்ள எருவும் நல்ல விதையும் அவர்களுக்கு விலையின்றிக்கொடுப்பார்கள் என்று அறிவித்தனர்' எனவும் அமைக்கலாம். இதனால் பொருள் வேறாகாது. ஆயினும், சார்புவாக்கியம் முன்பு அரசியலார் கூற்றாக அமைக்கப்பட்டது. பின்பு அது முதல் வாக்கியத்தைப் போலவே உரைப்போர் கூற்றாக மாற்றப்பட்டது. இவ்வாறு மாற்றிக் கூறுவதை ஆங்கிலத்தில் Indirect speech என்பார்கள்; தமிழில் அயற் கூற்று அல்லது பிறர் கூற்று எனக் கூறலாம்.

குறிப்பு :— கலவை வாக்கியம் விளக்கப்படும் பொழுதே கூற்று வகைகளும் விளங்குதல் காண்க.

2. இருதுபன்னன் வீமனிடம் "இன்றுன்னைக் காண்பதோர் ஆதரவால் யானிங்ஙன், மன்றல் மலர்த்தாராய், வந்தடைந்தேன்" என்றான்.

இதில், முதன்மைவாக்கியம் 'என்றான்' என்னும் வினைமுற்றால் முடிந்தது. ஆதலால் சார்பு வாக்கியம் 'என்று' முதலிய சொற்களால் இணைக்கப்பட்டிலது.

3. நீங்கள் முதன்மொழியாகிய தமிழை நன்கு கற்றுத் தேர்ச்சி பெறவேண்டும் என்பது எனது விருப்பம். இதில், சார்பு வாக்கியமே முதன்மை வாக்கியத்தின் எழுவாயாக வந்துளது.

4. உழைப்பே உயர்வு தருமென்பதை ஒவ்வொருவரும் மனத்தில் நன்கு பதித்துக் கொள்ளவேண்டும்.

இதில், சார்புவாக்கியமே முதன்மை வாக்கியத்தின் செயப்படு பொருளாக வந்துள்ளது.

குறிப்பு :— கலவை வாக்கியத்தின் பேதங்கள் இன்னும் பலவுள. அவைகள் வரும்பொழுது ஆங்காங்கே உணர்ந்துகொள்க.

பயிற்சி

I. 1. வாக்கியத்தின் முக்கியமான உறுப்புக்கள் எவை? செயப்படுபொருளின்றி இரு வாக்கியமும் செயப்படுபொருளோடு இரு வாக்கியமும் அமைத்துக்காட்டுக.

2. அடைமொழி என்றால் என்ன? நல்ல மாணவர்கள் தமது முக்கியமான பாடங்களைச் செவ்வையாகப் படிப்பர்.—இவ் வாக்கியத்திலுள்ள அடைமொழிகளை எடுத்துக் காட்டுக.

3. வாக்கியங்கள் எத்தனை வகைப்படும்? ஒவ்வொரு வகைக்கும் இரண்டிரண்டு உதாரணம் தருக.

II. கீழ்க்காணும் வாக்கியங்களில் ஒவ்வொன்றும் இன்ன வாக்கியம் என்று காரணத்துடன் கூறுக.

1. மணி யடித்தது ; மாணவர்கள் வகுப்பில் நுழைந்தனர்.

2. சிறந்த விஞ்ஞானிகளின் அரிய உழைப்பினால் வானொலி போன்ற புதுமைகள் பல தோன்றியுள்ளன.

3. மாணவர்கள் உழைத்துப் படிக்கிறார்கள் என்பது ஆசிரியருக்கு மிக்க மகிழ்ச்சி தரும்.

III. 'பாண்டிய மன்னர் தமிழ்ச் சங்கம் நிறுவினர் ; தமிழ் கற்றனர் ; தமிழ்ப் புலவர்களைப் பெரிதும் போற்றினர்'—இது என்ன வாக்கியம்? இதனை வேறு எவ்வகையாக அமைக்கலாம்?

IV. அரசியலார் உத்தரவிட்டிருக்கின்றனர். கள்ள வியாபாரம் செய்பவர் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.—இவ்விரண்டு வாக்கியங்களையும் கொண்டு ஒரு கலவைவாக்கியம் அமைக்க.

வாக்கியப் பொருத்தம்

7. ஒரு வாக்கியத்தில் உள்ள எழுவாயும் பயனிலையும் திணை பால் எண் இடம் ஆகிய இவற்றில் ஒத்துப் பொருந்தியிருக்கவேண்டும். அதுவே வாக்கியப் பொருத்தம் ஆகும்.

எழுவாய்க்குரிய திணை பால் முதலியவைகளே பயனிலைக்கும் ஆகும்.

உதாரணம்

1. முருகன் விரைந் தோடுகிருன்.

இதில், 'முருகன்' என்னும் உயர்திணை ஆண்பால் ஒருமைப் படர்க்கைப் பெயராகிய எழுவாய் அத்திணை பால் முதலியவற்றைக் கொண்ட 'ஓடுகிருன்' என்னும் வினைமுற்ருகிய பயனிலையைக் கொண்டு முடிந்தது.

2. வள்ளி தினை அரைக்கிருள்.

இதில், 'வள்ளி' என்னும் உயர்திணைப் பெண்பால் ஒருமைப் படர்க்கைப் பெயராகிய எழுவாய் அத்திணை பால் முதலியவற்றைக் கொண்ட 'அரைக்கிருள்' என்னும் வினைமுற்ருகிய பயனிலையைக் கொண்டு முடிந்தது.

3. மக்கள் வானெலி நிகழ்ச்சிகளை விரும்பிக் கேட்கின்றனர்.

இதில், 'மக்கள்' என்னும் உயர்திணைப் பலர்பாற் பன்மைப் படர்க்கைப் பெயராகிய எழுவாய் அத்திணை பால் முதலியவற்றைக் கொண்ட 'கேட்கின்றனர்' என்னும் வினைமுற்ருகிய பயனிலையைக் கொண்டு முடிந்தது.

4. குயில் இனிமையாகக் கூவிற்று.

இதில், 'குயில்' என்னும் அஃறிணை ஒன்றன்பால் ஒருமைப் படர்க்கைப் பெயராகிய எழுவாய் அத்திணை பால் முதலியவற்றைக் கொண்ட 'கூவிற்று' என்னும் வினைமுற்ருகிய பயனிலையைக் கொண்டது.

5. மயில்கள் மேகத்தைக் காணின் தம் தோகையை விரித்து அழகாக ஆடும்.

இதில், 'மயில்கள்' என்னும் அஃறிணைப் பலவின்பாற் பன்மைப் படர்க்கைப் பெயராகிய எழுவாய் அத்திணை பால் முதலியவற்றைக் கொண்ட 'ஆடும்' என்னும் வினைமுற்றாகிய பயனிலையைக் கொண்டது.

6. நீ பரீட்சையில் தேறினாய்; நீங்கள் பரீட்சையில் தேறினீர்கள்.

இவற்றில், 'நீ' என்னும் முன்னிலை யொருமைப் பெயரும் 'நீங்கள்' என்னும் முன்னிலைப் பன்மைப் பெயருமாகிய எழுவாய்கள், முறையே, 'தேறினாய்' என்னும் முன்னிலையொருமை வினைமுற்றும் 'தேறினீர்கள்' என்னும் முன்னிலைப் பன்மை வினைமுற்றுமாகிய பயனிலைகளைக் கொண்டன.

7. நான் பாடுவேன்; நாங்கள் பாடுவோம்.

இவற்றில், 'நான்' என்னும் தன்மை யொருமைப் பெயரும் 'நாங்கள்' என்னும் தன்மைப் பன்மைப் பெயருமாகிய எழுவாய்கள், முறையே, 'பாடுவேன்' என்னும் தன்மை யொருமை வினைமுற்றும் 'பாடுவோம்' என்னும் தன்மைப் பன்மை வினைமுற்றுமாகிய பயனிலைகளைக் கொண்டன.

8. **மரியாதைப் பொருத்தமாவது** தாயார் தந்தையார் முதலியவர்களின் பெயர்கள் ஒருமையாக இருப்பினும் அவற்றை மரியாதையின் பொருட்டுப் பன்மை வாய்பாட்டாற் கூறுவதாம். [வாய்பாடு—சொன்முறை.] இங்ஙனங் கூறப்படும் பன்மை **மரியாதைப் பன்மை** எனப்படும்.

(உ - ம்)

1. எனது தாயார் எனக்குத் தின்பண்டம் கொடுத்தார்.
2. எனது தந்தையார் வாணிபத்திற்பெரும்பொரு ளீட்டினார்.
3. எங்கள் ஆசிரியர் எங்களுக்கு இலக்கணபாடம் நன்கு கற்பிக்கிறார்.
4. ஔவையார் ஒரு சிறந்த தமிழ்ப் புலவர்.
5. சாத்தனார் மணிமேகலை என்னும் நூலை இனிய தமிழில் இயற்றியுள்ளார்
6. மாமியார் மருமகனிடம் மிக்க அன்பு கொள்வர்.

பயிற்சி

1. வாக்கியப் பொருத்தம் என்பது யாது?

2. எழுவாய் பயனிலை செயப்படு பொருள்களாகக் கீழே காட்டியுள்ளவற்றை ஏற்றவாறு பொருத்தித் தனித்தனி வாக்கிய மாக்குக.

எழுவாய்	பயனிலை	செயப்படு பொருள்
எருமை	உழுகின்றான்	பாடம்
கிளிகள்	மேய்கிறது	நிலத்தை
நாங்கள்	கொய்கின்றன	தினைக் கதிரை
நீ	கற்கிறோம்	புல்
மக்கள்	ஒப்பிப்பாயா	இலக்கணம்
நான்	(திரளாகக்) கூடினர்	பாட்டை
நீங்கள்	செல்வேன்	பள்ளி
தாயார்	(விரைந்து) வாருங்கள்	பிள்ளைகளை
மாணவர்	(போற்றி) வளர்ப்பர்	தமிழ்
உழவன்	படிக்கின்றனர்	
குயில்கள்	பயின்றனர்	
பாரி மகளிர்	கூவுகின்றன	

எழுத்துப் பிழைகளும் திருத்தமும்

9. தமிழில் உள்ள எழுத்துக்களுள் றகர ரகரங் களும் நகர ணகர னகரங்களும் லகர ளகர ழகரங்களும் ஆகிய இவ்வெழுத்துக்களை ஒன்றுபோல ஒலித்து ஒன்று வரவேண்டிய இடத்தில் அது போல வேறொன்றை எழுது மாறு தோன்றும். அங்ஙனம் எழுத்துக்கள் மாறி வருத லால் உண்டாகும் பொருள்வேறுபாட்டையும் பொருள் பொருந்தாமையையும் நன்குணர்ந்து அத்தகைய எழுத்துப் பிழைகள் நேரா வண்ணம் திருத்தமாகப் பேசவும் எழுத வும் பழகிக்கொள்ளவேண்டும்.

பயிற்சி

I. கீழே காட்டியுள்ள சொற்களை அவற்றிலுள்ள ரகர றகரம் முதலியவற்றின் ஒலிவேறுபாடு தோன்ற உச்சரித்து அச்சொற்களின் பொருள்வேறுபாட்டையும் காண்க.

ர—ற

1. அரம்; அறம். மரம்; மறம். பரி; பறி. கரி; கறி. கூரிய; கூறிய. அரிதல்; அறிதல். கரத்தல்; கறத்தல். எரிதல்; எறிதல். பரவை; பறவை. மரித்தல்; மறித்தல். இருத்தல்; இறுத்தல்.

அரம் - ஓர் ஆயுதம்; அறம் - தருமம். மரம் - மரம்; மறம் - வீரம், பாவம். பரி - குதிரை; பறி - பிடுங்கு, ஒருவகைப் பை. கரி - யானை, சாட்சி, கருமையான ஒரு பொருள். கறி - காய்கறி, இறைச்சி. கூரிய - கூர்மையான; கூறிய - சொன்ன. அரிதல் - வாளால் அரிதல்; அறிதல் - தெரிந்து கொள்ளுதல். கரத்தல் - மறைத்தல்; கறத்தல் - வெளிப் படுத்தல். எரிதல் - தீ யெரிதல்; எறிதல் - வீசி யெறிதல். பரவை - கடல்; பறவை - பறக்கும் பிராணி. மரித்தல் - சாதல்; மறித்தல் - தடுத்தல். இருத்தல் - உட்காருதல்; இறுத்தல் - தங்கியிருத்தல், விடையளித்தல்.

ந—ண—ன

2. வெந்நீர்; வெண்ணீர். அன்னம்; அண்ணம். நந்நூல்; நன்னூல். உன்னல்; உண்ணல். காண்; கான். பேண்; பேன். பனி; பணி. கணி; கனி. கன்னி; கண்ணி. பானம்; பாணம். என்னாடு; எந்நாடு.

வெந்நீர் - சூடான நீர்; வெண்ணீர் - வெண்மையான நீர். அன்னம் - ஓர் பறவை; அண்ணம் - மேல் வாய். நந்நூல் - நமது நூல்; நன்னூல் - நல்ல நூல், ஓர் இலக்கண நூல். உன்னல் - எண்ணுதல்; உண்ணல் - உட்கொள்ளல். காண் - பார்; கான் -

காடு பேண் - போற்று; பேன் - ஒரு பூச்சி. பணி - தாழ், வேலை; பனி - நுண்ணிய நீர்த்துளி. கணி - சோதிடம்; கனி - பழம், சுரங்கம். கன்னி - பெண்; கண்ணி - பறவை பிடிக்கும் வலை. பானம் - பருகும் பொருள்; பாணம் - அம்பு. என்னாடு - எனது நாடு; எந்நாடு - எமது நாடு.

ல—ள—ழ

3. தலை; தளை; தழை. விலை; விளை; விழை. கலை; களை; கழை. வால்; வாள்; வாழ். தால்; தாள்; தாழ். தோல்; தோள். வெல்லம்; வெள்ளம். பல்லம்; பள்ளம். வாளை; வாழை. மலை. மழை. முளை; முழை. காலை; காளை. வேலை; வேளை. கொல்லை; கொள்ளை. கொல்லல்; கொள்ளல். தொல்லை; தொள்ளை.

தளை - கட்டு; தழை - இலை. விளைவு - ஆக்கம், பயன்; விழைவு - விருப்பம். கலை - கல்வி; களைதல் - நீக்குதல்; கழை - மூங்கில், கரும்பு. தால் - நாக்கு. பல்லம் - அம்பு, வாளை - ஒரு வகை மீன். முழை - குகை. கொல்லை - தோட்டம்; கொள்ளை - மிகுதி. கொல்லல் - கொலைசெய்தல்; கொள்ளல் - ஏற்றல், பெறுதல். தொல்லை - பழமை, துன்பம். தொள்ளை - துளை.

II கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள சொற்களில் அமைந்துள்ள ர ற முதலிய எழுத்துக்கள் பிழையாய் இருப்பின் அவற்றைத் திருத்துக:

1. கண்ணன் பால் கரக்கிறான்.
2. முருகன் மரம் வெட்டினான்.
3. சேரிட மரிந்து சேர்.
4. இயல்வது கறவேல்.
5. அறஞ் செய விரும்பு.
6. நேற்று நல்ல மளை பெய்தது.
7. ஆடு தளை தின்கின்றது.
8. பள்ளி சுவர் முதலியவற்றில் ஊறும் பிராணி.

9. பழுதையைக் கண்டு பாம்பென் றஞ்சாதே.
10. பிளை செய்தால் அதனை ஒப்புக்கொல்ல வேண்டும்.
11. பணிக் காலத்தில் குளிர் மிகுதியாக இருக்கும்.
12. குளிர்காலத்தில் வென்னீரிற் குளிக்கவேண்டும்.
13. இராமபானம் குறி தப்பாது.
14. வேடர்கள் பரவை பிடிக்கக் கன்னி வைத்தனர்.
15. கனி மொழிந்த நாளில் கடிமனமும் செய்தனர்.
16. அகல உழுதலினும் ஆள உழுதல் நலம்.
17. எறும்பூறக் கல்லும் குளியும்.
18. அரசியலார் மதுபானத்தை அறவே ஒளித்தனர்.
19. கொல்லையில் மாடுகள் மேய்கின்றன.
20. பொருள்தனைப் போற்றி வாழ்.

வாக்கிய முடிவுப் பிழைகளும் திருத்தமும்

10. ஒரு வாக்கியத்திலுள்ள எழுவாயும் பயனிலையும் திணை பால் எண் இடங்களில் ஒத்து முடிதல் வேண்டும். இது முன்னர் 'வாக்கியப் பொருத்தம்' என்னுந் தலைப்பில் விளக்கிக்காட்டப் பெற்றது. ஒரு வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகள் திணை பால் முதலியவைகளில் ஒத்து முடியாவிடில் அவ்வாக்கியம் பிழைபட்டதாகும்.

	பிழை	திருத்தம்
1.	மாடுகள் வந்தது.	மாடுகள் வந்தன.
2.	ஆடும் மாடும் ஓடுகின்றது.	ஆடும் மாடும் ஓடுகின்றன.
3.	கந்தனும் வள்ளியும் பாடுகிறான்.	கந்தனும் வள்ளியும் பாடுகிறார்கள்.
4.	கண்ணன்குழலூதுகின்றார்.	கண்ணன் குழலூதுகின்றான்.
5.	தசரதர் ஒரு சிறந்த மன்னன்.	தசரதர் ஒரு சிறந்த மன்னர்.
6.	என் மாமியார் வருகின்றாள்	என் மாமியார் வருகின்றார்.

7. புலிகள் புல் தின்னுது.	புலிகள் புல் தின்னு.
8. மாடு விரைந் தோடா.	மாடு விரைந் தோடாது.
9. நானும் நீயும் பாடுவேன்.	நானும் நீயும் பாடுவோம்.
10. நீயும் அவனும் நேற்று வந்தாய்.	நீயும் அவனும் நேற்று வந்தீர்கள்.
11. மக்களின் தொகை பெருகுகின்றன.	மக்களின் தொகை பெருகுகின்றது.
12. கண்ணகி கற்பிற் சிறந்தவர்.	கண்ணகி கற்பிற் சிறந்தவள்.

வாக்கிய மாற்றம்

11. வாக்கிய மாற்றம் என்பது கருத்து மாறுபடாத வகையில் ஒரு வாக்கியத்தை வேறொரு வாக்கியமாக மாற்றுதல்.

அவ்வாறு மாற்றுங்கால் செய்தி வாக்கியத்தை வினு வாக்கியமாகவும் வினு வாக்கியத்தைச் செய்தி வாக்கியமாகவும் உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாகவும் எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாகவும் தனி வாக்கியத்தைத் தொடர் வாக்கியமாகவும் தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியமாகவும் இங்ஙனம் ஒன்றை மற்றொன்ருக மாற்றலாம்.

செய்தி வாக்கியமும் வினுவாக்கியமும்

(உ - ம்)

செய்திவாக்கியம்	வினுவாக்கியம்
1. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.	கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?
2. கபிலரும் பாரியும் சிறந்த நண்பர்.	கபிலரும் பாரியும் சிறந்த நண்பரன்ருே?
வினுவாக்கியம்	**செய்திவாக்கியம்**
1. மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழக்க வேண்டுமா?	மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழக்க வேண்டுவதில்லை.

2. நான் உனது நண்பனன்றோ?	நான் உனது நண்பனே.

உடன்பாட்டு வாக்கியமும் எதிர்மறை வாக்கியமும்

உடன்பாட்டு வாக்கியம்	எதிர்மறை வாக்கியம்
1. திருக்குறளில் எல்லாப் பொருளும் கூறப்பட்டுள.	திருக்குறளில் கூறப்படாத பொருள் இல்லை.
2. அன்புடையார் பிறர்க்குதவி செய்வர்.	அன்புடையார் பிறர்க்குதவி செய்யாதிரார்.

எதிர்மறை வாக்கியம்	உடன்பாட்டு வாக்கியம்
1. விடாமுயற்சி யுடையார் வெற்றிபெறாத செயலில்லை.	விடாமுயற்சி யுடையார் எச்செயலிலும் வெற்றி பெறுவர்.
2. காந்தியடிகளைப் போற்றிப் புகழாத நாட்டினர் இல்லை.	காந்தியடிகளை எந்நாட்டினரும் போற்றிப் புகழ்வர்.

தனி வாக்கியமும் தொடர் வாக்கியமும்

தனி வாக்கியம்	தொடர் வாக்கியம்
1. மணியடித்தது. மாணவர் வகுப்பில் நுழைந்தனர்.	மணியடிக்க மாணவர் வகுப்பில் நுழைந்தனர்.
2. கந்தன் உழைத்துப் படித்தான்; பரீட்சையில் தேறினான்.	கந்தன் உழைத்துப் படித்தமையால் பரீட்சையில் தேறினான்.

தொடர் வாக்கியம்	தனிவாக்கியம்
1. ஒரு வாரமாக நல்ல மழை பெய்தமையால் ஏரியில் நீர் நிரம்பியது.	ஒரு வாரமாக நல்ல மழை பெய்தது. அதனால், ஏரியில் நீர் நிரம்பியது.
2. மக்களுக்குப் போதிய அளவு உணவுப் பொருள் கிடைப்பதில்லையாதலால், அரசியலார் உணவுப்பொருளுற்பத்தியைப் பெருக்கப் பெரிதும் முயன்று வருகின்றனர்.	மக்களுக்குப் போதிய அளவு உணவுப் பொருள் கிடைப்பதில்லை. ஆதலால், அரசியலார் உணவுப்பொருளுற்பத்தியைப் பெருக்கப் பெரிதும் முயன்று வருகின்றனர்.

பயிற்சி

I. செய்தி வாக்கியத்தை வினுவாக்கியமாகவும் வினு வாக்கியத்தைச் செய்தி வாக்கியமாகவும் மாற்றுக.

1. தேன் ஒரு இனிய பொருள்.
2. சேர்ந்து வாழ்வது சிறந்த வலிமையன்றோ?
3. பருந்து வானில் வட்டமிடும்.
4. நல்லாரிணக்கம் நன்மை தரும்.
5. கல்விப் பொருள் அழியாததன்றோ?
6. கடவுளை வழிபடாவிடின் கற்றதனுலாகிய பயனென்?

II. உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறையாகவும் எதிர் மறை வாக்கியத்தை உடன்பாடாகவும் மாற்றுக.

1. பருவத்திற் பயர் செய்தல் வேண்டும்.
2. உழைப்பவர் ஊதியம் பெருதிரார்.
3. கல்விக்கழகு கசடற மொழிதல்
4. கற்ருேரைச் சிறப்பிக்காத நாடில்லை.
5. ஒழுக்கம் விழுப்பம் தரும்.
6. பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை

III. தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாகவும் தொடர் வாக்கியத்தைத் தனி வாங்கியங்களாகவும் மாற்றுக.

1. காக்கை ஏறப் பனம்பழம் விழுந்தது.
2. சூரியன் உதித்தது. இருள் நீங்கிற்று.
3. வேலன் வேட்டையாடும் பொருட்டுக் காடு சென்ருன்; ஒரு இளைய பெண்மானைக் கண்டான்; அதன் மீது ஆசை கொண்டான்; அதனைப் பிடித்தான்; தன் வயமாக்கிக் கொண்டான்.
4. இன்று நண்பகலில் வானில் கனத்த மேகம் பாவியிருந்தமையால் சூரிய வெப்பம் சிறிதும் தோன்றவில்லை.
5. பரதன் பெருஞ்சேனையோடு வருதலைக்கண்ட குகன் அவன் தன் நண்பனுகிய இராமனுடன் போர்செய்ய வருகிருனெனக் கருதிப் பெருஞ்சினங்கொண்டு அவனுடன் போர் புரியப் படை திரட்டினன்.

நிறுத்துக் குறிகள்

12. நிறுத்துக்குறிகள் என்பவை நாம் படிக்கும் பொழுது இன்ன இன்ன இடத்தில் இவ்வளவு இவ்வளவு நேரம் நிறுத்தி இன்னவகையாய்ப் படிக்கவேண்டும் என்பதை அறிவிக்கும் குறிகளாம்.

அவை முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, முக்காற்புள்ளி, மேற்கோட்குறி, உணர்ச்சிக்குறி, வினைக் குறி எனப் பலவகைப்படும்.

. இக்குறி முற்றுப்புள்ளி. இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் முற்றுப்புள்ளி அமைந்திருக்க வேண்டும்.

; இக்குறி அரைப்புள்ளி. இங்கு இரண்டு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

தொடர்ந்த கருத்துள்ள வினைமுற்றுக்களின் பின் அரைப்புள்ளி வைக்கப்படும்.

, இக்குறி காற்புள்ளி. இங்கு ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

பல சொற்கள் வரிசையாகவந்து ஒரு சொல்லைத் தழுவி நிற்குமாயின் அச்சொற்களின் பின்னே காற்புள்ளி வைக்கப்படும்.

: இக்குறி முக்காற்புள்ளி. இங்கு மூன்று மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

ஒரு பொருளை முதலிற் குறித்துப் பின்பு அதன் விளக்கத்தை எழுதும்பொழுது அவ்விளக்கத்திற்கு முன்னே முக்காற்புள்ளி இடப்படும்.

" " இக்குறி மேற்கோட்குறி. இது இரட்டை மேற்கோட்குறி. மேற்கோட்குறி தொடங்கும்பொழுதும் முடி

யும் பொழுதும் இரண்டு அல்லது மூன்று மாத்திரை நேரம் நிறுத்தலாம்.

ஒருவர் கூறிய செய்தியை அவர் கூறிய வண்ணமே அவர் வழங்கிய சொற்களாலேயே எடுத்துக் காட்டும் பொழுது அச்செய்திக்கு முன்னும் பின்னும் மேற்கோட் குறி அமைக்கவேண்டும்.

' ' இதுவும் மேற்கோட்குறி. இது ஒற்றை மேற் கோட் குறி எனப்படும். இக் குறிக்கு முன்னும் பின் னும் ஒரு மாத்திரை நேரம் நிறுத்தலாம்.

ஒருவர் கூறிய செய்தியின் சாரத்தை எடுத்துக்காட்டும் பொழுதும் ஒன்றைச் சிறப்பாகக் குறிக்கக் கருதும் பொழுதும் இக்குறி அமைக்கப்படும்.

! இது உணர்ச்சிக்குறி. இங்கு மூன்று அல்லது நான்கு மாத்திரை நேரம் நிறுத்தலாம். உணர்ச்சிக்குறி வியப்புக்குறி எனவும் கூறப்படும்.

வியப்பையேனும் வேறு உணர்ச்சியையேனும் குறிக் கும் சொற்களின் பின்னே உணர்ச்சிக்குறி இருக்க வேண்டும்.

? இது வினக்குறி. இங்கும் மூன்று அல்லது நான்கு மாத்திரை நேரம் நிறுத்தலாம்.

கேள்வியாக வுள்ள வாக்கியத்தின் இறுதியில் வினக் குறி இருக்கவேண்டும்.

பயிற்சி

I கீழ்வரும் பகுதியைப் பொருள் இனிது விளங்குமாறு நிறுத்துக் குறிகளுக் கேற்ப நிறுத்திப் படிக்க.

நமது தமிழ்நாட்டில் பண்டைக்காலத்திற் பல வள்ளல்கள் இருந்தனர். அவர்கள் பாரி, பேகன், அதியமான், ஆய் முதலியோர். இவர்களுள், பாரி மிகச்சிறந்தவன். வீரத்திலும் கொடையிலும் ஒப்புயர்வற்றவன். ஒருகால், அவன் தன்னை

எதிர்த்த மூவேந்தரையும் தோல்வியுறச்செய்தான். பாரி தனது பறம்பு நாட்டிலுள்ள முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க் கீந்தவன். ஒரு நாள் அவன் தன் நாட்டின் மலைவளங் காணத் தேரேறிச் சென்றான். செல்லும் நெறியில், ஒரு முல்லைக்கொடி கொழு கொம்பில்லாமையால் தாழ்ந்து அசைந்துகொண் டிருந்தது. அதனைக் கண்ட பாரி உடனே தேரை நிறுத்தினான்; கீழே இறங்கினான்; தேரை அதனருகே செலுத்தினான்; "படர்க இக்கொடியும் பாங்குற இதன்மேல்" என்று கூறிக் கொடியைத் தேரோடு தொடுத்து வைத்தான். ஒரு கொடியாகிய ஓரறிவுயிரிடத்தும் பாரி கொண்ட அன்பு எத்தகையது! இத்தகைய அன்பு பற்றியே புலவர்கள் 'சிறிய பூக்களையுடைய முல்லைக் கொடிக்குப் பெரிய தேரை யளித்தோன்' என்றிங்ஙனம் பாரியைப் புகழ்ந்து பாராட்டலாயினர்.

II அடியிற் காணும் பகுதியில் வேண்டிய இடங்களில் நிறுத்துக் குறிகளைப் பொருத்தமாக அமைக்க.

தசரத சக்கரவர்த்திக்குக்கோசலை கைகேயி சுமித்திரையென மனைவியர் மூவர் இராமன் பரதன் இலக்குமணன் சத்துருக்கனன் எனப் புதல்வர் நால்வர் இவர்களுள் இராமனுக்கு முடிசூட்டத் தசரதர் நிச்சயித்தார் ஏன் இராமன் முதல்மகன் ஆயினும் கைகேயி இராமனை யழைத்து அவன் காடு செல்லவும் பரதன் நாடாளவும் வேண்டுமென அரசன் பணித்தான் என்றனள் அதுகேட்ட இராமன் மன்னவன் பணியன்றாகில் நின்பணி மறுப்பனோ என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ என்று கூறி மிக்க மகிழ்ச்சியுடன் காடு சென்றான் இச்செய்திகளையறிந்த பரதன் மிகமிக வருந்தினான் தனக்குக் கிடைத்த அரசாட்சியாகிய பெருஞ்செல்வத்தை வெறுத்தான் தன் தமையனே அரசாள வேண்டுமெனக் கருதினான் கானகம் சென்றான் அங்கிருந்த இராமனை அயோத்திக்கு மீண்டுவந்து முடிசூட்டிக்கொள்ளுமாறு

மிகவும் வற்புறுத்தி வேண்டினன் என்னே பரதனுடைய சகோதர அன்பு

வல்லெழுத்து மிகுமிடமும் மிகாவிடமும்

12. வருமொழி முதலில் க ச த ப என்னும் வல் லெழுத்துக்கள் வரின் அவை சில இடங்களில் மிகும்; சில இடங்களில் மிகா.

மிகும் இடம்

1. இரண்டாம் வேற்றுமை விரி :

(உ - ம்) வேலையைச் செய்; கூலியைப் பெறு.

2. நான்காம் வேற்றுமை விரி :

(உ - ம்) கடைக்குப் போ; வீட்டுக்குத் திரும்பு.

3. சில சொற்களின் உயிரீறு :

(உ - ம்) மரப் பேழை; அறச் சாலை.

4. அகர இகர யகர வீற்று வினையெச்சங்கள் :

(உ - ம்) குளிக்கப் போனன்; தேடிப் பிடி; விரைவாய்ச் செல்.

5. சுட்டெழுத்து, வினவெழுத்து :

(உ - ம்) அக் கிளி; இச் செயல்; எப்பொருள் ?

6. அந்த, இந்த, எந்த என்பவை :

(உ - ம்) அந்தக் காலம்; இந்தச் செயல்; எந்தப் பையன்?

7. அப்படி, இப்படி, எப்படி என்பவை :

(உ - ம்) அப்படிச் செய்; இப்படிப் போ; எப்படிப் பாடினர் ?

8. ஆறும் வேற்றுமைத் தொகை :

(உ - ம்) வாழைக் காய்; பலாப் பழம்; மலைச் சிகரம்.

9. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை :

(உ - ம்) வரிப்புலி; படித்துறை; தயிர்ச் சட்டி; நெய்க்கலயம்.

10. ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை :

(உ - ம்) மனைக்கிணறு; மலைப் பழம்; கடைத் தேங்காய்.

11. வன்றொடர்க் குற்றியலுகரம் :

(உ - ம்) அச்சுக்கூலி; எழுத்துச் சிறிது; பட்டுப் புடவை.

12. மென்றொடர்க் குற்றியலுகரப் பெயர் :

(உ - ம்) நண்டுக்கால்; வண்டுத் தலை; விருந்துச் சோறு.

13. அங்கு, இங்கு, எங்கு என்பவை :

(உ - ம்) அங்குக் கண்டேன்; இங்குக் கூடினர்; எங்குச் சென்றாய்?

14. இரு பெயரொட்டுப் பண்புத் தொகை :

(உ - ம்) அவரைக் கொடி; சித்திரைத் திங்கள்; மாலைப் பொழுது.

15. 'என' என்னும் இடைச் சொல் :

(உ - ம்) வாவெனக் கூறினன்; நன்றெனச் சொன்னேன்.

16. 'சால', 'தவ', 'தட' முதலிய உரிச் சொற்கள் :

(உ - ம்) சாலப் பெரிது; தவப்பிஞ்சு; தடக்கை.

மிகா இடம்

1. இரண்டாம் வேற்றுமைத் தொகை :

(உ - ம்) கனிதின்றான்; பால்பருகினான்.

2. நான்காம் வேற்றுமைத் தொகை :

(உ - ம்) பள்ளி சென்றான்; வீடு திரும்பினான்.

3. ஆறாம் வேற்றுமை விரி :

(உ - ம்) எனது சுவடி; கண்ணனுடைய பசு.

4. அகரவீற்றுப் பெயரெச்சம் :

(உ - ம்) ஓடின குதிரை; உழுகிற மாடு; அரிய செயல்.

5. சில எண்ணுப் பெயர்கள் :

(உ - ம்) ஒருகால்; இருசெவி; எழுபிறப்பு

6. எழுவாய் :

(உ - ம்) கொடி சிறிது; காய் பெரிது.

7. வினைமுற்று :

(உ - ம்) ஓடின குதிரைகள்; வந்தனர் சிறுமியர்.

8. பல சில என்னும் பெயர்கள் :

(உ - ம்) சில புலவர்; பல குமரர்.

9. மென்றொடர்க் குற்றியலுகர வினையெச்சங்கள் :

(உ - ம்) எழுந்துபோ; நின்று பேசினர்; கண்டு சென்றனர்.

10. அன்று இன்று என்று என்பவை :

(உ - ம்) அன்று கண்டனர்; இன்று பேசினர்; என்று செல்வீர்?

11. 'ஆல்' விகுதிபெற்ற வினையெச்சங்கள் :

(உ - ம்) வந்தால் பார்க்கலாம்; பேசினால் புரியும்; உண்டால் பசிதீரும்.

குறிப்பு :—'வந்தால்ப் பார்க்கலாம்; பேசினால்ப் புரியும்; என்றிங்ஙனம் ஒற்றுமிகுத்துக் கூறுதலும் எழுதுதலும் தவறு.

12. ண ள மெய்கள் திரிந்த டகரம் :

(உ - ம்) மட்குடம்; முட்செடி.

13. ன ல மெய்கள் திரிந்த றகரம் :

(உ - ம்) பொற்காப்பு; பற்பொடி.

14. வினா விளிப்பெயர்கள் :

(உ - ம்) நீயா பேசினாய்? கந்தா கேள்.

15. 'என்று' என்னும் இடைச்சொல் :

(உ - ம்) நன்றென்று கூறினான்; அன்றென்று சொன்னார்.

16. நனி, மழ முதலிய உரிச்சொற்கள் :

(உ - ம்) நனிதின்றான்; மழகளிறு.

பயிற்சி

கீழ்க்காணும் தொடர்களில் வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகுத்துக் கூறுக.

பாட்டை பாடு; கடைக்கு போ; எழுந்து பேசு; அடை தின்றான்; பாலை பருகு; காடு சென்றான்; பொறுத்து பார்; நிறுத்தி பேசு; எனது தலை; அந்த பையன்; வெட்டின குளம்; படிக்கிற பையன்; தொடர்ந்து சென்றான்; தேடி பிடி; குளிக்க போனான்; பத்து பாட்டு; மென்று தின்; உண்ட களைப்பு; உரக்க பேசு; இந்த காலம்; மோர் குடம்; நெய் சோறு; செடி பெரிது; காய் சிறிது; பல பேர்; மட்பாண்டம்; கற்சட்டி; ஒரு சமயம்; எழுபிறப்பு; எடுத்து கொடு; வாவென சொன்னான்; போவென்று கூறினான்; வைகாசி திங்கள்; குழகன்று; களைத்தன குதிரைகள்; அவனை பேசினான்; மடபிடி; நனிபேதை; தவபெரிது.

211

A NEW TAMIL GRAMMAR

for FORM IV

(GENERAL COURSE)

[Prepared according to the 1949 Syllabus]

BY

Vidwan M. PERIASAWMY PILLAI

T. G. GOPAUL PILLAI

TEPPAKULAM : : TIRUCHIRAPALLI

Copyright]

[Price As. 10